12TH DECEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 60 | பக்கங்கள் - 11 | editor.uthayam@gmail.com

# சமூகத்துக்கு நற் பிரஜைகளை விட்டுச் சென்ற ஹாஜியானி மரியம் பீபி.



(பாரா தாஹீர்)

இயற்கை அன்னை ஈன்றெடுத்த அழகிய சூழலான ஹெம்மாதகமையில் மாதருக்கு மணிமகுடமாய் விளங்கிய ஹாஜியானி மரியம் பீபீ அவர்கள்,1931 ஆம் ஆண்டு மாவனல்லை ஹெம்மாதகம தும்புளுவாவையில் பிறந்தார். சிறந்த மார்க்க பின்னணியில் வளர்க்கப்பட்ட இவர் காலஞ்சென்ற தும்புளுவாவ அதிபர் வாஹிட் மற்றும் லாபிர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

02ம் பக்கம்பார்க்க...

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## எதிர்க் கட்சிகள் இன்று பேச்சு!



தற்போதைய பாராளுமன்றத்தின் சபாநாயகர் அசோக ரன்வல மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இது குறித்து எதிர்க் கட்சிகள் இன்றைய தினம் கூடி கலந்துரையாடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற

02ம் பக்கம்பார்க்க...

# அக்குறணை வெள்ளப் பெருக்கு நிரந்தர தீர்வுக்கு நடவடிக்கை

## அமைச்சர் லால்காந்த மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை!

அக்குறணை நகரில் நீண்ட காலமாக இருந்து வரும் வெள்ளப் பெருக்கினை சமாளிப்பதற்கான வேலைத் திட்டமொன்றினை சகல தரப்பினரதும்

02ம் பக்கம்பார்க்க...

# ஈராக் தூதரக நிகழ்வில் சஜித் பிரதம அதிதி



இலங்கை மற்றும் ஈராக் குடியரசு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள ஈராக்கிய தூ தரகத்தினால் (10) கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில்

02ம் பக்கம்பார்க்க...

# அமெரிக்க தூதுவர் ஹக்கீம் சந்திப்பு நடப்பு விடயங்கள் பற்றி பேச்சு!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே. சங் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பொன்று (10) கண்டியில் இடம் பெற்றுள்ளது.



# மஹிந்தவின் பாதுகாப்பு குறைப்பு அரசாங்கம் அதிரடி

## இது ஒரு பாரதூரமான நிலை; சட்டத்தரணி மனோஜ் கமகே கவலை

இந்த நாட்டில் புரையோடிப் போயிருந்த பயங்கரவாதத்தை சமாதானம் மலர்வதற்கு அயராதுழைத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு அமர்த்தப்படட்டிருந்த 116 படை வீரர்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

02ம் பக்கம்பார்க்க...



# பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தபா!



புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி தேர்தல் ஆணைக்குழுவினால் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவராக ஆதம்பாவா எம்.பி.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களான, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், நாவிதன்வெளி, பொத்துவில், திருக்கோவில்,

02ம் பக்கம்பார்க்க...







உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## இது ஒரு..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விளைவிக்கலாம் என சட்டத்தரணி மனோஜ் கமகே கவலை வெளியிட்டார்.

பொதுஜன பெரமுன கொள்கை மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித வள முகாமைத்துவ பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவுக்கு நேற்றுமுன்தினம் (10) கடிதம் மூலம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் இருந்து 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவில் உயர்தர பாதுகாப்பில் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் அனைவரும் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரபாகரன் என்ற சித்தாந்தம் கொண்டவர்கள் இதுவரை இல்லாதொழிக்கப்படாத நிலையில், அந்த பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது மிகவும் பாரதூரமான நிலை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈராக்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ஈராக் குடியரசால் நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் Anmar A. A. Al-Emin இன் கௌரவ அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

## அக்குறனை..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஆலோசனைகளைப் பெற்றுத் தயாரிக்குமாறு அமைச்சர் லால் காந்த கண்டி மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்பே அமைச்சர் லால்காந்த ஊடகங்களிடமா மேற்கண்டவாறு தெரிவித்தார். அக்குறணையில் அடிக்கடி ஏற்படக் கூடிய வேள்ளப்பெருக்கிக்கு சட்ட விரோத கட்டிடங்களை காரணமென்றும் அக் கட்டிடங்களை அங்கிருந்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

*வாசகர்களே!*

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.**

**உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**

## சபாநாயகருக்கு...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய பல்கலைக்கழகமொன்றில் கலாநிதிப் பட்டம் பெற்றமை தொடர்பில் சபாநாயகர் அசோக ரன்வல மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பல்கலைக்கழகத்தில் அவர் படிக்கவில்லையென்றும் அதனால் தனது கலாநிதிப் பட்டம் குறித்து பொய் கூறியுள்ளார் என்றும் அவர் மீது பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து அவர் நாட்டு மக்களுக்கு தெளிவான விளக்கமொன்றினை வழங்க வேண்டுமென்றும் அஜித் பெரேரா கேட்டுக் கொண்டுள்ளார்.

## சமூகத்துக்கு...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

உடையார் பரம்பரையைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர் காலஞ்சென்ற நிசாமுந்தீன் உடையார் அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டதன் மூலம் இவர் அரநாயக்க தல்கஸ்பிடிய தலாவையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார். நல்லொழுக்கத்துடனும், மார்க்க பின்னணியுடனும் வாழ்ந்த இவர் கணவரின் ஆயுர்வேத வைத்திய துறைக்கு உறுதுணையாக இருந்ததுடன் சிங்கள பேச்சு மொழியிலும் சிறந்து விளங்கினார். அல் குர்ஆனுடனான தொடர்பை பேணி வந்த இவர் தினமும் திக்ர் திலாவத்துடன் வாழ்ந்து வந்தார்.

ஐந்து ஆண்களும் நான்கு பெண்களுமாக ஒன்பது பிள்ளைகளுக்கு தாயான இவர், சமூகத்தில் ஒரு சிறந்த முன்மாதிரியான தாயாக தன்னை செப்பனிட்டு கல்வியோடும், மார்க்கத்தோடும், சிறந்த பிள்ளைகளை உருவாக்கினார்.

இவர்களுள் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான என். எம். அமீன், ஆங்கில ஆசிரியர் அப்துல் ரஸ்ஸாக், துறை முக அதிகார சபையில் கடமையாற்றிய காலஞ்சென்ற இர்பான், ஆசிரியர் இஹ்ஸான், காலஞ் சென்ற இன்ஆம், ஆசிரியைகளான சித்தி ஸனியா, நூர்லைன், சிஹானா, மற்றும் ஹலீமா ஆகியோர் கல்வி சார் நடவடிக்கைகளினூடாக சமூகத்திற்காக சிறந்த பணிகளை செய்து வருவதுடன் இத் தாயின் சிறந்த வளர்ப்புக்கு எடுத்துக் காட்டாக உள்ளனர். உறவுகளை பேணி அயலவர்களுடனும் ஒன்றிணைந்து வாழ்ந்தவர். சிறிது காலம் சுகயீனமுற்றிருந்த இவர் 2024 டிசம்பர் ஏழாம் திகதி இறைவனின் அழைப்பை ஏற்று இறையடி சேர்ந்தார். அன்னாரின் அனைத்து காரியங்களையும் இறைவன் பொருந்திக் கொண்டு ஜென்னதுல் பிர்தவ்ஸ் எனும் சுவனத்தை சுவாசிக்க செய்வானாக!

## அபிவிருத்தி...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஆலையடிவேம்பு ஆகிய பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அவர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.







# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### மனிதனின் நன்மைக்கே

"(நபியே) நிச்சயமாக நாம் மனிதர்களுடைய நன்மைக்காகவே முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை உம் மீது அருளினோம். ஆகவே எவன் (இதனைப்) பின்பற்றி நடக்கின்றானோ அது அவனுக்கே நல்லது. எவன் (அதிலிருந்து) வழிதப்பிவிடுகின்றானோ அது அவனுக்கே தீங்காக முடியும். (நபியே) நீர் அவர்களை (நேர்வழியில் நடக்குமாறு நிர்ப்பந்தித்து)க் காப்போரல்ல." (39:41)

### சிபாரிசுகள் யாவும் அல்லாஹ்வுக்கே

(பின்னும் நபியே) நீர் கூறும்! சிபாரிசுகள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. (ஆகவே அவனுடைய அனுமதியின்றி அவனிடத்தில் ஒருவரும் சிபாரிசு செய்ய முடியாது) வானங்கள் பூமியின் ஆட்சி (முழுவதும்) அவனுக்குரியதே. (மறுமையில்) பின்னர் அவனிடமே நீங்கள் கொண்டுவரப்படுவீர்கள்." (39:44)

(நபியே நான் கூறியதாக) நீர் கூறும். எனது அடியார்களே (உங்களில்) எவரும் வரம்புமீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும் அல்லாஹ்வின் அருளைப்பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம்.(நீங்கள் பாவத்திலிருந்து விலகி மனம் வருந்தி மன்னிப்புக் கோரினால்) நிச்சயமாக அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் யாவையும் மன்னித்துவிடுவான். ஏனென்றால் நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்போனும் கிருபையுடையோனுமாக இருக்கின்றான்" (39:53)

"ஆகவே (மனிதர்களே) உங்களை வேதனை வந்தடைவதற்கு முன்னதாகவே நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பி, அவனுக்கு முற்றிலும் வழிபட்டு நடவுங்கள். (வேதனை வந்துவிட்டாலோ) பின்னர் (ஒருவராலும்) நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்" (39:54)

### சிறப்பான கண்ணியம்

எவன் (சிறப்பான) கண்ணியத்தை விரும்புகின்றானோ (அவன் அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடக்கவும். ஏனென்றால் கண்ணியங்கள் யாவுமே அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. (கலிமா தைய்யிபா, ஸலவாத்துப் போன்ற) தூய வாக்கியங்கள் அவனளவில் ஏகுகின்றன. நல்ல செயல்களை அவனே உயர்த்துகின்றான்." (35:10)

### இலாபம் தரும் வர்த்தகம்

"எவர்கள் அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி தொழுகையையும் கடைப்பிடித்து நாம் அவர்களுக்கு அளித்தவைகளை இரகசியமாகவும் பரகசியமாகவும் தானம் செய்து வருகிறார்களோ அவர்கள், நிச்சயமாக என்றுமே நஷ்டமடையாத (இலாபம் தரும்) ஒரு வர்த்தகத்தை எதிர்பார்க்கலாம்." (35:29)

"தூய எண்ணமுடைய அல்லாஹ்வுடைய அடியார்களைத் தவிர (மற்றவர்கள் எல்லோரும் நம்முடைய வேதனைக்குள்ளாவார்கள்) (37:74)

### நேரானவழி சுயநன்மைக்கே

"(நபியே, நீர் கூறும்) அன்றி அல்குர்ஆனை நான் (யாவருக்கும்) ஓதிக்காண்பிக்குமாறு (ஏவப்பட்டுள்ளேன். அதனைக் கொண்டு) எவன் நேரான வழியை அடைகிறானோ அவன், தன் சுயநன்மைக்காகவே நேரான வழியில் செல்கிறான். எவரேனும் (இதிலிருந்து) விலகிக் கொண்டால், (நபியே, நீர் அதைப்பற்றிக் கவலைப்படாதீர்.) "நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன் மட்டும் தான். (நிர்ப்பந்திப்பவனல்ல)" என்று கூறும்." (27:92)

### மேலான கூலி

"(உங்களில்) எவரேனும் யாதொரு நன்மையை(ச் செய்து) கொண்டுவந்தால், அவருக்கு அதைவிட மேலான கூலியே கிடைக்கும். (உங்களில்) எவரேனும் யாதொரு பாவத்தை(ச் செய்து) கொண்டுவந்தால், அத்தகைய பாவிகள் அவர்கள் செய்த பாவங்களின் அளவேயன்றி (அதிகமாகத்) தண்டிக்கப்பட மாட்டார்கள்." (28:84)

"(அல்லாஹ்வுடைய வழியில்) எவரேனும் பிரயாசை எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அவன் தன் சொந்த நலனுக்காகவே பிரயாசை எடுத்துக் கொள்கிறான். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் (தன்) படைப்புக்களின் (உதவி) தேவையற்றவனாக இருக்கிறான்." (29:6)

"ஆகவே, எவர்கள் விசுவாசம் கொண்டு, நற்கருமங்களைச் செய்கின்றார்களோ, அவர்களுடைய பாவத்தை அவர்களைவிட்டு நிச்சயமாகப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் செய்த நன்மைகளுக்கு (அவற்றைவிட) மிக்க அழகான கூலியை நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்," (29:7)

"எவர்கள் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களைச் செய்கின்றார்களோ, அவர்களை நிச்சயமாக நாம் நல்லோருடன் சேர்த்து விடுவோம்." (29:9

# பைசருக்கு தேசிய பட்டியல் ஐ.தே.கட்சி ஆட்சேபனை

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா வுக்கு அக்கட்சிக்குரிய தேசிய பட்டியல் நியமனம் வழங்கப்பட்டது குறித்து ஐக்கிய தேசிய கட்சி ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் பங்காளிக் கட்சிகளுடனான இணக்கப்பாடுகளை மீறி இந்த நியமனம் வழங்கப்பட்டு இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜ்ர அபேவர்த்தன அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். கட்சிக்கு கிடைத்த இரண்டு தேசிய பட்டியலில் ஓர் ஆசனத்தை முன்னாள் மின்சார எரிபொருள் அமைச்சர் காஞ்சனா விஜயசேகர வுக்கு வழங்க தீர்மானம் எடுத்திருந்த நிலையில் அது பைசர் முஸ்தபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பைசர் முஸ்தபா வின் நியமனம் நேற்று தேர்தல் ஆணைக்குழுவினால் உறுதி செய்யப்பட்டது. எதிர்வரும் 17ஆம் தேதி பாராளுமன்றம் கூடும் போது அவர் பதவியேற்கவுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி எதிர்காலத்தில் எதிரகொள்ளும் வழக்குகளை இலவசமாக பேசுவதற்கு இணக்கப்பாடு ஏற்பட்டு இருப்பதன் காரணமாகவே பைசர் முஸ்தபா வுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. கடந்த தேர்தலில் ஐந்து ஆசனங்கள் இந்த கட்சிக்கு கிடைத்திருந்தது.

இதில் மூன்று ஆசனங்கள் தேர்தல் தொகுதிகள் மூலமும் இரண்டு ஆசனங்கள் தேசிய பட்டியல் மூலமும் வழங்கப்பட்டிருந்தது. இதனைப் பிரித்துக் கொள்வதில் கட்சிகளுக்கு இடையே நிலவும் போட்டி இப்பொழுது முற்றுப் பெற்ற நிலையிலேயே பைசர் முஸ்தபா வுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 DECEMBER 12 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இரத்த ஆறு ஓடும் சிரியாவும், அதன் எதிர்காலமும்..!

சிரியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. சிரியாவின் தலைநகரான டமஸ்கஸை 2024.12. 06 ஆம் திகதி கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றியதோடு அந்நாட்டில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த பசர் அல் அசாத் விஷேட விமானம் ஒன்றின் மூலம் சோவியத் ரஷ்யாவுக்கு தப்பியோடி தஞ்சம் புகுந்துள்ளார். சுமார் 24 வருட கால அவரது ஆட்சி முற்றுப் பெற்றிருக்கின்றது. இதற்கு முன்னர் அவரது தந்தையான ஹாபிஸ் அல் அசாத் 1971 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையில் சிரியாவை ஆட்சி செய்தார். இவ்வாறாக பார்க்கின்ற போது சுமார் 53 வருட கால அல் அசாத் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டிருக்கின்றது.

கடந்த இரண்டு வாரகாலமாக அங்கு கடுமையான மக்கள் கிளர்ச்சி வெடித்தது முதல் சுமார் 300,000 சிரிய மக்கள் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அதே நேரம் அசாதின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆனால் பசர் அல் அசாத் 2024 டிசம்பர் 06 ஆம் திகதி வரையில் கிளர்ச்சியாளர்களுக்கு பிடி கொடுக்காமல் கடுமையான முறையில் அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்சியை தக்க வைத்து வந்த ஒருவராவார். தற்போது அங்கு ஏற்பட்டுள்ள இரத்த ஆறு ஓடும் நிலை காரணமாக மத்திய கிழக்கு பிரதேசத்தில் மீண்டும் அமைதியின்மையும் அச்ச நிலையும் உருவாகி, அது போர் மேகங்கள் சூழ்ந்த பிரதேசமாக மாறி இருக்கின்றது.

அசாதை துரத்திவிட்டு புதிய ஆட்சியாளராக ஏற்கனவே சிரியாவில் அசாத் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்து போராட்டம் நடத்தி வந்த ஹயாத் தஹ்ரீர் அல் ஷாம் என்ற கிளர்ச்சிப் படைகளின் தலைவர் அபூ மொஹம்மத் ஜுலானி சிரியாவின் அடுத்த ஜனாதிபதியாக பதவி ஏற்று இருக்கின்றார். இவர் பதவி ஏற்றதும் முதல் வேலையாக அசாத்தின் ஆட்சியில் சிறை பிடிக்கப்பட்டிருந்த 10,000 இற்கும் மேற்பட்ட சிறைக் கைதிகளை விடுதலை செய்து சிறைக் கூடங்களை திறந்து விட்டுள்ளார்.

இதற்கிடையில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு புறம் இஸ்ரேலும் மறுபுறம் அமெரிக்காவும் சிரியாவின் முக்கிய பகுதிகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடாத்தி அந்நாட்டை அழித்து நாசமாக்கி வருகின்றனர். இந்த தாக்குதல்கள் காரணமாக இஸ்ரேல் கூறுவது, கடந்த காலங்களில் சிரியாவில் சோவியத் ரஷ்யாவால் வழங்கப்பட்ட பயங்கரமான ஆயுதங்கள், ஏவுகணைகள், இரசாயன ஆயுதங்கள் உள்ளன. அவை தற்போதைய நிலையில் கிளர்ச்சிப் படையான ஹயாத் தஹ்ரீர் அல் ஷாம் படை வசமாகிவிட்டால் அதனால் இஸ்ரேலின் இறைமைக்கும் இருப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். அதனால் அத்தகைய ஆயுதங்கள், ஏவுகணைகள், ரேடார் தொழில்நுட்ப மையங்கள், ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட அனைத்தையும் அழித்து சிரியாவை யுத்த சூனிய பிரதேசமாக்கி விட்டதாக அறிவித்திருக்கின்றது.

அவ்வாறே அமெரிக்கா தெரிவிக்கையில் அங்கு ஈரான் ஆதரவு படைகள் இருப்பதால் பயங்கரமான ஆயுதங்கள் மற்றும் ரஷ்யாவின் ஆயுத களஞ்சிய சாலைகள் உள்ளன. அவை அயல் பிராந்தியங்களுக்கு ஆபத்தாக மாற நிலையான சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்ற காரணத்தால் தாக்குதல் நடத்தியதாக அறிவித்திருக்கின்றது. மறுபுறமாக சிரியாவுக்குள் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்கள், இஸ்ரேல் ஆதரவு படைகள், அமெரிக்க ஆதரவு படைகள், துருக்கி ஆதரவு படைகள், ஹிஷ்புல்லாஹ் படைகள் என்று பல ஆயுதக் குழுக்ள இருக்கின்றன.

எவ்வாறாக இருந்தாலும் இப்போது சிரியாவின் அமைதி கெட்டு அங்கு மக்கள் அச்சத்திலும் பீதியிலும் உறைந்து போய் நிம்மதியற்ற வாழ்க்கை வாழும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. 2010 ஆம் ஆண்டு முதல் பசர் அல் அசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடிய 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள், அப்பாவி பொதுமக்கள் என்று கொன்று குவிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. ஏற்கனவே ஹிஸ்புல்லாஹ் அமைப்பு இஸ்ரேல் மீது 2023 ஒக்டோபரில் தாக்குதலை ஆரம்பித்ததில் இருந்து பலஸ்தீனத்தில் 01 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

இந்நிலையில் சிரியாவில் புதிய ஆட்சி மலர வேண்டும். அது மக்கள் இறைமைக்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் சிரிய மக்களின் இறைமை, தன்னாதிக்கம் கொண்ட ஆட்சியாக அமைய வேண்டும். அங்கு மற்றுமொரு அடக்குமுறை ஆரம்பமாகி மீண்டும் இரத்த வெள்ளம் ஓடும் கொலை களமாக மாறக் கூடாது. சிரிய மக்களின் வாழ்வில் அல்லாஹ்வின் உதவிக்கரம் விரிக்கப்பட வேண்டும். இவ்வாறான கிளர்ச்சிகளாலும் ஆட்சி மாற்றங்களாலும் நடுவில் சிக்குண்டு அல்லல் படுபவர்கள் எதுவும் அறியாத எந்த குற்றமும் செய்யாத அப்பாவி பொதுமக்களாவர்.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்று தராதர வேறுபாடு இன்றி பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகின்றது. தொடராக மத்திய கிழக்கு கடந்த 05 தசாப்தங்களுக்கு மேலாக இவ்வாறாக அமைதி கெட்ட பிரதேசமாக மாறி இருப்பது கவலை தருகின்றது.

சந்தர்ப்ப சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி இஸ்ரேலும் அமெரிக்காவும் இந்த நாடுகளில் அதன் கைவரிசையை காட்டி அழித்து தரைமட்டமாக்கி வருகின்றது. ஏற்கனவே ஆப்கானிஸ்தான், பின்னர் லிபியா, ஈராக், லெபனான், என்று இஸ்லாமிய நாடுகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நிலையில் இப்போது சிரியா அந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. அதனால் எமது பிரார்த்தனையாக அமைவது சிரியாவில் அமைதி நிலவ புதிய ஆட்சியாளர்கள் தேவையான அடித்தளத்தை இட வேண்டும் என்பதாகும். அடுத்து என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சி







(பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு 11ஆம் திகதி (11) புதன்கிழமை நடைபெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க வழிகாட்டலின் கீழ் ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இச் செயலமர்வு கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் பள்ளிச் சங்க இணைச் செயலாளரும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் கலீபதுஷ் ஷாதுலி அல்-ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெற்றதோடு அவர் ஆரம்ப உரையும் வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

டாக்டர். ரயீஸ் மீரா பயிற்சி செயலமர்வை நடாத்தியதோடு பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல்-ஹாஜ் எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ) ஆத்மீக பயிற்சி வழிகாட்டல்கள் என்ற தலைப்பிலும், அதிபர் அல் உஸ்தாத் மௌலவி. எம் அஸ்மிகான் (முஅய்யிதி) நன்றி உரையும் நிகழ்த்தினார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிவாசல்கள், ஷாதுலிய்யா ஸாவிய்யாக்கள், சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸ் நிர்வாகத்தின் கீழ் உள்ள. குர்ஆன் மத்ரஸாக்களில் கடமை புரியும் உலமாக்கள், முஅல்லிமாக்கள், ஏனைய உலமாக்கள், முகத்தம்கள் என பலரும் பங்குபற்றினர். கலீபதுஷ் ஷாதுலி மௌலவி ஸைனுல் ஆபிதீன் (பஹ்ஜி) துஆ பிரார்த்தனை நடாத்தியதோடு கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி எம் ஐ எம் றபீக் (பஹ்ஜி), மௌலவி பாறூக் (மக்கி) யும் கலந்து சிறப்பித்தனர்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் உட்பட உறுப்பினர்கள், ஜாமியத்துல் பாஸியத்துஷ் ஷாலுலிய்யா கலாபீட நிர்வாக சபை உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

# அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் சிறுவர் சந்தை



(ஏ.சி. பௌசுல் அலிம்)

சிறுவர்களின் அறிவும் ஆற்றலும் ஒளிர்ந்த நாள்

மினுவாங்கொடை கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் மலர்ந்தது தனிச்சிறப்பு மிக்க நிகழ்வு ஒன்றின் மூலம். பாடசாலையின் மாணவர்கள் தங்கள் ஆக்கத்திறனையும் அறிவின் வளத்தையும் காட்டிக்கொடுத்தனர்.

சிறுவர் சந்தையின் சிறப்புகள், கைத்தறி முறைப் பொருட்களும், இனிய உணவுப் பதார்த்தங்களும், புத்திசாலித்தனமாக வடிவமைக்கப்பட்ட கைவினைப் பொருட்களும் இச் சந்தையில் அலங்கரித்தன. "சிறுவர்களின் சொந்த முயற்சியில் உருவான இவை, அவர்களின் ஆற்றலை வெளிக்காட்டும் சாட்சியங்களாகத் திகழ்கின்றன,

மாணவர்களின் ஆர்வமும் சமூகத்தின் ஆதரவும்

"எங்கள் எண்ணங்களுக்குப் போக்கைத் தந்த சந்தை இது," என ஒரு மாணவி உருக்கமாக கூற, "இவ்வாறான நிகழ்வுகள் எங்களை புதிய கனவுகளின் மையமாக கொண்டு செல்கின்றன," என மற்றொரு மாணவன் கருத்து தெரிவித்தான்.

தமது குழந்தைகளின் திறமைகளை பகிர்ந்து மகிழ்ந்த பெற்றோர்கள், "இது நவீன கல்வியின் உண்மையான நோக்கம்," என பெருமையாகக் கூறினர். கிராம மக்களும் இதனை பாராட்டி, சிறுவர்களின் முயற்சிகளை உற்சாகத்துடன் ஆதரித்தனர்.

# மணிச்சுடர் நாளிதழுக்கான மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீனின் தாயார் மறைவுக்கு பேராசிரியர் காதர் மொகிதீன் இரங்கல்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், இலங்கை மணிச்சுடர் நாளிதழ் மூத்த ஊடகவியலாளர் ஹாஜி என். எம். அமீன் தாயார் ஹாஜியானி மரியம் பீவி (வயது 92) சனிக்கிழமை காலமானார். அவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், மனித நேய கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா மற்றும் ஸ தமிழகத்தில் உள்ள உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.

உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், இலங்கை நாட்டின் மணிச்சுடர் நாளிதழ் மூத்த ஊடகவியலாளரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான ஊடகவியலாளர் என்.எம். அமீன் அவர்களின் தாயார் மரியம் பீவி (வயது 92) சனிக்கிழமை உடல் நலக்குறைவால் காலமானார்.

இவரது மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், இலங்கை மணிச்சுடர் நாளிதழ் மூத்த ஊடகவியலாளர் ஹாஜி என். எம். அமீன் தாயார் ஹாஜியானி மரியம் பீவி மரணமுற்ற செய்தியை கேட்டு மிகவும் துக்கமும் துயரமும் அடைந்தேன்.

இலங்கை நாட்டில் பல்வேறு சமூக பணிகளை செய்து வரும் ஹாஜி என். எம். அமீன் நற்பணிகளுக்கு அவரது தாயார் பெரும் உதவியாக இருந்துள்ளார். அவரது மறைவு பேரிழப்புக்கு அல்லாவுடைய பெரும் கருணையால் மீள் வளத்துக்கும் அல்லாவிடம் பிராத்திப்போம். அவருடைய பிளைகளை பொறுத்தி கொண்டு ஜன்னத்தூல் பிர்ஃதௌஸ் என்னும் பேராணந்த பெரும் வீட்டை இறைவன் அவருக்கு வழங்குவனாக அவரின் மறைவால் வாடும் அவரது மக்கள் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும்

ஜம்ரன் ஜமீலன் என்னும் அழகிய பொறுமையை வழங்குவதற்கு இறைஞ்சிவோம்.எனது சார்பிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கொள்கிறேன் இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன் இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என். எம். அமீனின் தாயார் மறைவிற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்ர், மாநில முதன்மை துணைத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான், மனித நேய கட்சியின் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான கே. நவாஸ் கனி, எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக், மாநில துணைச் செயலாளர் இப்ராஹிம் மக்கி, மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது, ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாகிகள், இலங்கையில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் தலைவர்கள, ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக அமைப்பை சேர்ந்தவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.

# குறைந்த கட்டணத்தில் பாடநெறிகளை வழங்கும் அமேசன் கல்லூரி



அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா 24 நவம்பர் 2024 அன்று டீஆஜஊடை இல் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினுடைய பதில் துணைவேந்தர் மதிப்பிற்குரிய Dr . U. L. அப்துல் மஜீத் அவர்களும், சிறப்பு அதிதியாக மாலைத்தீவினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஹூ சைன் ஷரீப் அவர்களும், விசேட அதிதிகளாக ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தினுடைய மானுடவியல் துறை சார் நிபுணர் பேராசிரியர் பிரனீத் அபேய்சுந்தர அவர்களும், களனி பல்கலைக்கழகத்தினுடைய மொழியியல் துறை சார் நிபுணர் பேராசிரியர் S.J. யோகராஜா மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினுடைய குற்றவியல் துறையில் மூத்த விரிவுரையாளர் ஆச. உதயகுமார அமரசிங்க ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அமேசான் கல்லூரி இரண்டு குறிப்பிடத்தக்க சாதனைகளை அறிவித்ததால், இந்த ஆண்டு பட்டமளிப்பு விழா முக்கியத்துவம் வாய்ந்ததாக



இருந்தது. மாலைத்தீவின் யுளனை கல்லூரியுடன் இணைந்திருப்பது, நிறுவனத்தின் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் மாணவர்களுக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல், மற்றும் யுடீநு- ருமு அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல்.

அமேசான் கல்லூரியின் பணிப்பாளர் திரு இல்ஹாம் மரிக்கார் தலைமையில் அமேசான் கல்லூரி குழுவினரினால் இந்த குறிப்பிடத்தக்க வருடாந்த பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

எமது அமேசன் உயர் கல்வி நிறுவனமானது UGC இனால் அங்கீகரிக்கப்பட்ட MIU & IIC பல்கலைக்கழகங்களோடு இணைந்து பல்வேறு பட்ட பட்டப்படிப்புக்களை இலங்கை மாணவர்களுக்காக வழங்கி வருகின்றது. தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூலமாக இப்பாட நெறிகள் நடைபெ றுகின்றது.

BA in Political science
BBA, BA in English
Bachelor of Education
Bachelor of Social Science in Psychology

இப்பாடநெறிகள் அனைத்தும் UGC - University Grants Commission kw;Wk;
IAU - International Association of Universities
இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரம்மாண்ட பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்களாகும்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது பாட நெறிகளை நிறைவு செய்த பின்னர் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களில் தமது உயர் பட்டப்படிப்புக்களை தொடர்ந்து வருகின்றனர். அதேபோன்று எமது மாணவர்கள் பல்வேறுபட்ட தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

GCE (O/L) மற்றும் GCE (A/L) கல்வியினை நிறைவு செய்த மாணவர்கள் ஞுனிடழஅய, உனுே பாட நெறிகளையும் எமது நிறுவனத்தினூடாக தொடர முடியும்.

Diploma பாட நெறிகளாக




UK Diploma in Psychology & Counselling
UK Diploma in Information Technology
UK Diploma in Teacher Training
UK Diploma in Business Management
UK Diploma in AMI & Early Childhood Education
UK Diploma in English

Diploma பாட நெறியை நிறைவு செய்த மாணவர்கள் உனுே பாட நெறியை எமது நிறுவனத்தில் தொடர முடியும்.

HND பாட நெறிகளாக
HND (UK) in Psychology & Counselling
HND (UK) In Information Technology
HND (UK) In Teacher Training
HND (UK) In Business Management
HND (UK) In English Teaching
HND (UK) In English

HND பாட நெறியை நிறைவு செய்த மாணவர்கள் பட்டப்படிப்புகளுக்கான இறுதி ஆண்டுக்கு நுழைவதற்கான வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அமேசன் உயர்கல்வி நிறுவனத்தினுடைய சான்றிதழ்கள்

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றவையாக காணப்படுகின்றது.

எமது நிறுவனமானது ISO 2001 தரச் சான்றிதழை பெற்றது. மற்றும் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் மூன்றாம் நிலை கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC - P01/0854) பதிவு செய்யப்பட்டதும் ஆகும்.

சுமார் 1000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது உயர்




கல்வி நிறுவனத்தில் பட்டப்படிப்புக்களை நிறைவு செய்து வெளிநாட்டு தனியார் பல்கலைக்கழகங்களிலும் , உள்நாட்டு அரச தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எங்களுடைய அமேசன் உயர் கல்வி நிறுவனமானது இதுவரை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சுமார் ஆறு விருதுகளை பெற்றுள்ளது.

1. Best Psychology Campus In Sri Lanka - 2024
2. Quality Education - 2024 by Dr. Abdul Kalam International Foundation> India
3. Best Leading Campus Award - 2023 by BWIO (USA) Awards
4. SDG Partner Award - 2022 by Sunfo Global
5. Top Promising College - 2021 Times News Magazine India
6. Most Emerging College - 2018 By Human Rights Organization

இவ்வாறு மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதில் எமது அமேசன் உயர்கல்வி நிறுவனம் முன்னணியில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2023 ஆம் ஆண்டு பிரபல தனியார் கல்லூரியான Amazon College கல்வி ராஜாங்க அமைச்சரினால் Amazon Campus ஆக தரம் உயர்த்தப்பட்டது.

வறிய மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில்களையும் வழங்கி, குறைந்த கட்டணத்தில் பல பாடநெறிகளையும் வழங்கி வருகின்றது.

இந்நிறுவனமானது பிரபல கல்வியியலாளர் திரு இல்ஹாம் மரிக்கார் அவர்களின் தலைமையின் கீழ் சமூகத்திற்கு பயன் தரக்கூடிய வகையில்

நடைபெற்று வருகின்றது.
(https://www.amazoncollege.lk/)



# உதவும் உள்ளங்களின் 179வது வெள்ளிதோறும் தர்மம்







(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

ஓட்டமாவடி - காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பின் வாரம் தோறும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வரும் வெள்ளிதர்மம் உலருணவு பொதிகள் வழங்கும் திட்டத்தினை இம்முறை வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து இடைத்தங்கள் முகாம்ங்களுக்கு செல்லாது உறவினர்களது வீடுகளில் தங்கியிருந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

அந்த வகையில் காகித நகர் கிராமசேவகர் பிரிவில் காவத்தமுனை பிரதேசத்தில் துறையடி வீதி, ஜனசவிய வீதி, பனிச்சையடி வீதி, பாடசாலை வீதி, ஹிஸ்புல்லாஹ் குறுக்கு வீதி ஆகிய பகுதிகளில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பகளுக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான 80 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வைக்கப்பட்டன.

இதற்கான நிதியுதவிகளை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் கத்தார் குழு, குவைட் குழு மற்றும் பிரதேச தனவந்தர்கள் மூலமாக கிடைக்கப்பெற்றதோடு அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பீல்ட் குழுவினரது ஒத்துழைப்போடு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்மாயில் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களின் கத்தமுல் குர்ஆன் தமாம் நிகழ்வு





(பீ.எம் முக்தார்)

மக்கொனை ஜும்ஆப் பள்ளிவாசலில் அடங்கப்பட்டுள்ள ஆத்மீக ஞானி சங்கைக்குரிய இஸ்மாயில் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களின் பெயரிலான கத்தமுல் குர்ஆன் தமாம் கந்தூரி மஜ்லிஸ் நிகழ்வு மௌலவி ஸக்கி அஹமத் அலவிய்யத்துல் காதிரி தலைமையில் நடைபெற்றது.

ஹத்தாத் ராத்தீப் மஜ்லிஸும், மார்க்கச் சொற்பொழிவும், துஆப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.

பேருவளை மொல்லியமலை ஹிழ்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதம கதீப் மௌலவி அல்-ஹாஜ் எம்.எஸ்.எம் பாஸில் (அஷ்ரபி-அம்ஜதி) ஆத்மீக ஞானி அஷ்ஷெய்ஹ். இஸ்மாயில் வலியுல்லாஹ்வின் வாழ்க்கை வரலாறு பற்றி விஷேட சொற்பொழிவாற்றினார்.

உலமாக்கள், அலவிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள், முஸ்லிம்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

# உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சியும் செயலமர்வும்

(பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் உலமாக்களுக்கான தலைமைத்துவ பயிற்சியும், செயலமர்வொன்றும் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க வழிகாட்டலின் கீழ் ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள இச் செயலமர்வு கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் பள்ளிச் சங்க இணைச் செயலாளரும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அல்-ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெறுவதுடன் டாக்டர். ரயீஸ் மீரா பயிற்சி செயலமர்வை நடாத்துவார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிவாசல்கள், ஷாதுலிய்யா ஸாவிய்யாக்கள், குர்ஆன் மத்ரஸாக்களில் கடமை புரியும் உலமாக்கள், முஅல்லிமாக்கள் என 50 பேர் வரை இந்த தலைமைத்துவ செயலமர்வில் பங்குபற்றுவர் என கலாபீடத்தின் இணைப் பொருளாளர் முஸ்னி உவைஸ் தெரிவித்தார் .

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஊடகவியலாளர் ஸுபைரின் தந்தை மறைவு



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் (SLBC) நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளரும், தெல்தோட்டை ஊடக மன்றத்தின் தலைவருமான அஷ்ஷேய்க் ஸீ.எம்.எம்.ஸுபைர் (நளீமி)யின் தந்தை எஸ்.காதர் மீரா தனது 75 ஆவது வயதில் காலமானார்.

பிரதேச சமூக மட்டத்தில் முக்கியமான தலைவராகத் திகழ்ந்த அன்னார், கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக தெல்தோட்டை - வெடகேபொத மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்மா பள்ளிவாசலின் தலைவராக பணியாற்றினார். சமூக சேவைகளில் அவர் அர்ப்பணிப்போடு ஈடுபட்டமை பலரதும் பாராட்டுதலுக்குரியதாக இருக்கிறது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான அவர், அவர்களை நாட்டுக்கும் சமூகத்துக்கும் பங்களிக்கும் சிறந்த பிரஜைகளாக வளர்த்திள்ளார்: மூத்த மகன் அஷ்ஷேக் ஸுபைர் (நளீமி), இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பணியாற்றும் அதே வேளை தெல்தோட்டை ஊடக மன்றத்தின் தலைவராகவும் செயற்படுகின்றார் மற்றொரு மகன், சட்டமா அதிபர் காரியாலயத்தில் பணியாற்றுகிறார் மகள், க/எனசல்கொல்ல ஆரம்பப் பாடசாலையின் அதிபராக பணியாற்றுகிறார். மர்ஹூம் காதர் மீரா அவர்களது நேர்மையான சேவை சமூகத்தில் என்றும் நினைவு கூறப்படும்.

அன்னாரது ஜனாஸா கடந்த (06) வெள்ளிக்கிழமை, மஃரிப் தொழுகையின் பின் தெல்தோட்டை வெடகேபொத மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்மா பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டதோடு. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இந்த துயர நேரத்தில், ஜனாஸாவில் கலந்து கொண்ட, துஆப் பிரார்த்தனை செய்த, அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# கற்பிட்டியில் காலநிலை மாற்றத்தை எவ்வாறு எதிர்கொண்டு வெற்றி பெறுவது தொடர்பான கண்காட்சிக் கருத்தரங்கு

(அரபாத் பஹுர்தீன்)

காலநிலை மாற்றத்தினால் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளும் அதிலிருந்து அவர்கள் எவ்வாறு தீர்வுகள் பெற்றுக்கொள்வது தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழகமும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டமும் இணைந்து கல்பிட்டி பிரதேச செயலகத்தில் கண்காட்சி ஒன்றினை சனிக்கிழமை (7) ஏற்பாடு செய்திருந்தது.

இக் கண்காட்சி நிகழ்வின் போது பத்து தலைப்புகளில் கற்பிட்டி பிரதேசத்திலுள்ள பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் காலநிலை மாற்றத்தால் எதிர்கொள்ளும் சவால்களையும், அதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பான செயல்முறையினையும் 40 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் தமது சிறந்த சித்திரங்களில் மூலமாக வரைந்து,





அச் சித்திரங்கள் மூலமாக விரிவான விளக்கத்தினையும் கொடுத்திருந்தனர்.

அத்துடன் காலநிலை மாற்றத்தின் காரணமாக வாழ்வாதாரத்தில் என்ன தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது போன்று மீன் பதனிடல்,விவசாயம், சூரிய ஒளி இல்லாத காலத்தில் எவ்வாறு மாற்று மின்சாரத்தை பயன்படுத்துவது போன்ற முக்கிய அம்சங்கள் இதன் போது அவர்களுக்கு விரிவுரையாக முன் வைக்கப்பட்டது.

விசேடமாக நிலைபெறான நீர் முகாமைத்துவ மூலம் மலர் வளர்ப்பு தொழிலில் பெண்களை வலுவூட்டுவது மிக முக்கிய விடயமாக இதன் போது எடுத்துரைக்கப்பட்டது.

அதேபோல் வறட்சி மற்றும் தரிசு நிலத்தை எவ்வாறு சுயதொழில் மேம்பாட்டுக்காக பயன்படுத்துவது என்கின்ற விடயமும் மழைநீர் சேகரிப்பின் மூலம் எவ்வாறு சுய தொழில் முயற்சிகளுக்கு நீரினை பயன்படுத்துவது தொடர்பிலும் இங்கு விசேட விளக்கம் அளிக்கப்பட்டது.

வெப்பமான காலநிலையில் தும்பு தொழிலில் பணிபுரியும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பிலும் அவற்றை நேர் மறையான தாக்கத்தை விளக்கப்படுத்தி இயந்திரம் புதிய கட்டிட கட்டுமானம், மின்சாரத்திற்கான சோலார் பேனல்கள் மற்றும் வெப்பத்தை தணிப்பதற்கான விசிறிகள் இவை தொடர்பிலும் கண்காட்சியில் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் உள்ளூராட்சி மன்றத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சேதன கழிவுகளில் இருந்து உயிர் வாயுவை எவ்வாறு உருவாக்குவது அது போன்று பசலைகளை நச்சுத்தன்மை அற்ற முறையில் விவசாயத்திற்கு பயன்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இந்நிகழ்வின் பிரதான ஏற்பாட்டாளர்களான கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி ரஞ்சன பியாதாச, பேராசிரியர் சாமினி ஹேமச்சந்திர ஆகியோருடன் ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ரஞ்சித் புண்ணியவர்தன, காலநிலை அவதான நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரோஷான் ஹெரத் ஆகியோர் இதன் போது பிரசன்னமாக இருந்தனர்.

மேலும் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கிகளின் ஊழியர்கள் ஆகியோருடன் பெருந்திரளான கற்பிட்டி பிரதேச பெண் சுயதொழிலாளர்களும், முயற்சியாளர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹிஸ்புல்லாஹ் – இஸ்ரேல்; போர் சமாதான ஒப்பந்தம் நிலை பெறுமா?





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

லெபனான் உடனான போர் நிறுத்தம் எந்தவொரு அடிப்படையில் வெற்றிகரமாக தொடருமா என்கிற கேள்விக்கு விடை தெரியாத நிலையில் தான் தற்போதைய காட்சிகள் அமைந்துள்ளது. லெபனான் ஒரு பன்முக சமூகத்தை உள்ளடக்கிய இணைப்பு சமுகம் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

லெபனான் மீது இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் 3,500க்கும் மேற்பட்ட லெபனான் மக்கள் கொல்லப்பட்டனர். 12000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் விமானப் படை வீசிய குண்டு வீச்சு தாக்குதலின் போது படுகாயம் அடைந்தனர்.அதுபோன்ற நிகழ்வுகள் இன்னும் சற்றுக் காலத்திற்கு இருக்காது என்பதே இந்த மக்களின் நிம்மதிக்குக் காரணம். லெபனானில் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கை காரணமாக தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டவர்கள். தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்தனர் மற்றும் பல்லாயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன.ஆனால் இஸ்ரேலில், இந்தப் போர் நிறுத்த நடவடிக்கை பற்றிச் சிலர் வேறுவிதமான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். ஹிஸ்புல்லாஹ்வை அழிக்கும் வாய்ப்பை இஸ்ரேல் இழந்துவிட்டதாகச் சிலர் நினைக்கின்றனர்.

அதாவது லெபனானில் போரை முடிவுக்குக் கொண்டுவர 2006இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 1701 விதிகளின் கீழ், போரில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரும் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் எனத் தோன்றியது. எல்லையில் இருந்து ஹிஸ்புல்லாஹ் , ஐ.நா அமைதிப்படை மற்றும் லெபனான் ராணுவம் களமிறக்கப்படும், இஸ்ரேலிய ராணுவம் படிப்படியாக வெளியேறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் 60 நாட்கள் மட்டுமே அமலில் இருக்கும் என்பதே உண்மையாகும்.

இடைப்பட்ட காலப்பகுதியில் இஸ்ரேலிய ராணுவம், ஹிஸ்புல்லாஹ் ராணுவம், இந்த ஒப்பந்தத்தை முழுமையாக மதித்து நடக்க வேண்டும். அதன் பின்னர் இவர்கள் தங்கள் விரும்பும் வண்ணம் போயிடலாம் என்று நாம் புரிந்து கொள்ள அதிகம் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

காசா, ஹிஸ்புல்லாஹ், ஏமன் ஹொதீக்கள், ஈரான் மற்றும் இஸ்லாமிய கூட்டு படைகள் அனைத்தும் இணைந்து நடத்தும் இஸ்ரேலிய நாட்டிற்கு எதிரான போர் ஒரு கூட்டு நடவடிக்கை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இஸ்ரேலிய மற்றும் யூத சியோனிச எதிர்ப்பு மனநிலை அரபு மக்களிடம் தீயாக பற்றி எரிகிறது. ஆகவே இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் எந்தவொரு நிலையிலும் பலன் தராது என்பதை நாம் புரிந்து கொள்ள அதிகம் காலம் தேவைப்படாது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு தனது ராணுவத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய அளவில் ஆன பின்னடைவை நன்கு உணர்ந்து இருந்த காரணத்தினால் தான் இந்த முடிவை அவர் தவிர்க்க முடியாத நிலையில் எடுத்து விட்டு அவர் தன்பக்கம் இருக்கும் நியாயத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்து கூறி வருவதை நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றதுஸ.அதனால் இந்த சூழலைக் நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் பிரதமர் நெதன்யாகு, மேலும் சில காரணங்களுக்காகவும் போர் நிறுத்தத்திற்கு இப்போதுதான் சரியான நேரம் என்று நம்பினார். ஆகவே தான் சொந்த நாட்டில் மிகுந்த விமர்சனங்களுக்கு உள்ளான இது போன்ற முடிவை எடுத்து தனது அமைச்சரவை சகாக்கள் இடம் மிகப் பெரிய அளவிலான வார்த்தை போருக்கு இடையே இந்த கருத்தை அவர் பதிவு செய்து இருப்பதாக நம்பப்படுகிறது.

இஸ்ரேல் தனது வடக்கு எல்லையில் இருந்து ஹிஸ்புல்லாஹ்வை விரட்டிவிட்டு எல்லை நகரங்களுக்குக் குடிமக்களைத் திருப்பி அனுப்ப விரும்புகிறது. ஆனால் இஸ்ரேலிய வடக்கு பகுதியில் இருந்து பல இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறி இஸ்ரேலிய நாட்டின் மத்திய பகுதியில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள் தனது வாழ்க்கையை முழுமையாக இழந்து எதிர் காலம் குறித்த மிகப் பெரிய அளவில் ஆன பதை பதைப்பில் இருந்து வருகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது.

அதே சமயம் இஸ்ரேலிய அரசும் அதன் தலைவர் பெஞ்சமின் நிதான்யாகும் ஹிஸ்புஸ்லாஹ் நடத்திய வரம்பற்ற போர் முறையை சமாளிக்க இயலாத நிலைக்கு வந்து விட்டதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில், அவரைப் பொறுத்தவரை எந்தவொரு நிலையிலும் ஹிஸ்புல்லாஹ் அமைப்புடனான சமாதானத்தை விரும்பாத யூதர்கள் எப்படி இது போன்ற சமாதானத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராத நிலையில் மிகுந்த தோல்வி மற்றும் உயிரிழப்புகள் போன்ற வலிமையான காரணங்கள் தான் பெஞ்சமின் நிதான்யாகுவை மிகவும் இறங்கி வரச் செய்துள்ளது என்பதே சர்வதேச முகாமையாளர்களின் கருத்தாக இருக்கிறது.

இந்த போர் நிறுத்த உடன்படிக்கையில் ஹிஸ்புல்லாஹ் தாக்குதலுக்குத் தயாராகி வருவதாக சந்தேகம் எழுந்தால் ராணுவ நடவடிக்கை எடுக்கலாம் என்று அமெரிக்காவிடம் இருந்து இஸ்ரேல் ஒப்புதல் பெற்றது. ஆகவே தான் சந்தேகம் கொண்ட இரண்டு பரம வைரிகளும் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டால் அதன் முடிவுகள் இரண்டு தரப்பிற்கும் நன்மை தராது என்பதை இரண்டு குழுக்களும் நன்கு அறியப்பட்ட நிலையில் தான் இது போன்ற ஒப்பந்தங்கள் தற்போது நிறைவேறி உள்ளது.

போர் நிறுத்தத்திற்கான சரியான நேரம் இது என்பதற்கான காரணங்களைப் பட்டியலிட்டு பதிவு செய்யப்பட்ட அறிக்கையை நெதன்யாகு வெளியிட்டார். அதாவது போரியல் ஆய்வுகள் மற்றும் அமைச்சரவை சகாக்கள் இடம் அனுமதி பெறும் வகையில் நடந்து கூட்டத்தில் பெஞ்சமின் நிதான்யாகு பேசும் போது மிகுந்த நெருக்கடியை பெஞ்சமின் நிதான்யாகு சந்தித்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

லெபனான் தலைநகரம் பெய்ரூட்டின் அடித்தளத்தை இஸ்ரேல் அசைத்துவிட்டதாக பெஞ்சமின் நிதான்யாகு கூறினார். இது போன்ற போலியான காரணங்களை மக்களிடையே திணிக்க முற்பட்டு தம்முடைய பக்கத்தில் எல்லா விதமான அதிகாரம் மற்றும் தேசப்பற்று இருப்பதை அவர் பிரதிபலிக்க முன் சென்ற நிலையில் அவர் அதில் முழுமையான தோல்வியை சந்தித்து உள்ளது உள்ளங்கையில் நெல்லிக்காய் போன்றது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள முன் வர வேண்டும். ஏனெனில் வருங்கால சந்ததியினர் எந்தவொரு நிலையிலும் பாதிப்பிற்கு உள்ளாகி விடக் கூடாது என்பதே உண்மையாகும் என்று அவர் கூறினார்.

மேலும் “நமது ராணுவம் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம், அதன் பலத்தை மேம்படுத்ததும் வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளதாக’ நெதன்யாகு குறிப்பிட்டார்.

நம்மிடம் தற்போது போர் செய்வதற்கு உரிய ஆயுதங்கள் மிகுந்த பற்றாக்குறை உள்ளது. வெடிமருந்துகள் மற்றும் குண்டுகள் கையில் இல்லாத நிலையில் நாம் எப்படி ஹிஸ்புல்லாஹ்வை எதிர்த்து போரிட முடியும் என்று கூறிய பெஞ்சமின் நிதான்யாகு இதனை கூறுவதில் தமக்கு எந்தவொரு தயக்கமும் இல்லை என்று வெளிப்படையாக பேசினார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி, ஹமாஸ் இந்தப் போருக்குள் நுழைந்த மறுநாளே, மறைந்த ஹசன் நஸ்ருல்லாஹ் வடக்கு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார் மற்றும் காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படும் வரை தாக்குதல் தொடரும் என்றும் கூறினார். அதாவது கடந்த ஆண்டு 2023 அக்டோபர் 7 தேதி தொடங்கிய போரில் ஹிஸ்புல்லாஹ் உடனடியாக தன்னை இணைத்துக் கொண்டு இஸ்ரேலிய ராணுவத்திற்கு எதிராக போரைத் தொடர்ந்தது நடத்தியது குறிப்பிடத்தக்கது.

காஸாவில் உள்ள ஹமாஸ் இப்போது அதிக அழுத்தத்திற்கு உள்ளாகும் என்று பெஞ்சமின் நிதான்யாகுவை கூறியுள்ளார். காஸா பகுதியில் இஸ்ரேலின் தாக்குதல் மீண்டும் விரிவடையும் என பாலத்தீனர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஹெஸ்பொலாவை தாக்குவது என்பது இரானை தாக்குவதாகும். இஸ்ரேலின் எல்லையில் அச்சுறுத்தலை ஏற்படுத்த ஈரான் ஹெஸ்புல்லாஹ் உருவாக்கியது. கூட்டாளிகள் மற்றும் பினாமிகளால் உருவாக்கப்பட்ட அதன் பாதுகாப்பு வலையமைப்பிற்கு ஹஹிஸ்புல்லாஹ் எனப் பெயரிட்டது, மேலும் ஹிஸ்புல்லாஹ் ஈரானின் தற்காப்புப் படைகளில் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறியது. ஈரானின் அணைத்து வித உதவிகளையும் ஹிஸ்புல்லாஹ் பெற்று வருவதால் தான் சர்வதேச அளவில் இத்தனை அளவிற்கு மிகப் பெரிய அளவில் ஆன ராணுவ கட்டமைப்பை அவர்களால் கொண்டிருக்க முடிகிறது என்பதே உண்மையாகும்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வடக்கு இஸ்ரேலில் உள்ள உள்ளூர் அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்தார். அந்தப் பகுதிகளில் இருந்து ஏறக்குறைய 60,000 பொதுமக்கள் தெற்குப் பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.

குறிப்பாக வடக்கு இஸ்ரேலிய பகுதியில் இருந்து பல இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறி விட்டதாகவும் அவர்களின் விவசாய பண்ணைகள் முழுமையாக சேதாரம் அடைந்த நிலையில் மொத்தம் 300 க்கு மேற்பட்ட விவசாய பண்ணைகள் பெரும் தாக்குதலை சந்தித்து உற்பத்திகள் அழிந்து விட்டதாக கூறப்படுகிறது.

வடக்கு இஸ்ரேலிய பகுதியில் பல்வேறு துறைமுகங்கள் ஹைஃபா மற்றும் அஸ்கலோன் நகரங்கள் பலத்த சேதத்தை சந்தித்துள்ளது. இதற்கிடையில் ஹஹஉள்ளூர் அதிகாரிகள் சீற்றமடைந்தனர். லெபனானில் உள்ள எதிரிப் படைகள் மீதான ராணுவ அழுத்தத்தை இஸ்ரேல் தளர்த்துவது குறித்துச் சில உள்ளூர் அதிகாரிகள் அதிருப்தி அடைந்தனர். பொது மக்கள் மீண்டும் வீடு திரும்புவதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்தவில்லை என்பதே அவர்களின் சீற்றத்திற்குக் காரணம்” என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இஸ்ரேலின் சேனல் 12 நியூஸ் என்ற செய்தி ஊடகம் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில், போர் நிறுத்த நடவடிக்கைக்குத் தற்போது கலவையான எதிர்வினைகள் வருகின்றன. போர் நிறுத்தத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என இரு சாரார் உள்ளது தெரிய வந்துள்ளது. கருத்துக் கணிப்பில் பாதிப் பேர் ஹிஸ்புல்லாஹ் தோற்கடிக்கப்படவில்லை எனக் கருதுகின்றனர். அதேநேரத்தில் ஹிஸ்புல்லாஹ் ஒரு போராளி குழு மட்டுமே. உலகில் தங்களை வேறு யாராலும் வெற்றிக் கொள்ள முடியாத சக்தியாக இஸ்ரேல் உள்ளது என்கிற மாய பிம்பத்தை இன்று ஹிஸ்புல்லாஹ்க்கள் உடைத்து உள்ளனர் என்பதே உண்மையாகும். அதைத்தான் இஸ்ரேல் சேனல் 12 நடத்திய கருத்துக் கணிப்பில் 50 சதவீதம் பொதுமக்களின் கருத்து கண்டிப்பாக அமைந்துள்ளது.

ஹிஸ்புல்லாஹ் அமைப்பு மக்கள் வலுவான அமைப்பு என்பதில் எந்த ஐயமும் இல்லை. இஸ்ரேலிய ராணுவம் வான் படையினர் மூலம் தான் தங்கள் வலிமையை நிருபித்து வந்த நிலையில் அதற்கு மாற்றமாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தங்களது வலிமையான படை வீரர்கள் மற்றும் குறைந்த தூர, நீண்ட தூ ரம் வீசக்கூடிய பாலிஸ்டிக் ஏவுகணைகள் மிகவும் வலிமையான தாக்குதலை நடத்தி வந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவம் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 30 ந் தேதி சனிக்கிழமை காலை ஹிஸ்புல்லாஹ் மற்றும் இஸ்ரேல் ராணுவம் இடையே மீண்டும் முறுகல் நிலை காணப்படுகிறது. இதன் விளைவாக தெற்கு லெபனான் பறக்கும் பகுதியில் இஸ்ரேலிய ராணுவம் ராக்கெட் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வரும் நிலையில் இந்த போர் நிறுத்தம் நீடிக்குமா என்கிற சந்தேகம் வலுவாக ஏற்பட்டுள்ளது.ஷ

நேற்று மீண்டும் காசாவில் போர் உக்கிரமான நிலையை அடைந்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. இஸ்ரேலிய ராணுவ வீரர்களை ஏற்றி வந்த ராணுவ டிரக் மீது நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் பல இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு பதில் நடவடிக்கையாக இஸ்ரேலிய ராணுவம் நடத்திய வான்படை தாக்குதல் காரணமாக 40 பேர் பாலஸ்தீன பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வர இன்னும் சில நாட்கள் மட்டுமே இருக்கும் நிலையில் ஜோ பைடன் நிர்வாகம் பல்வேறு இறுதி கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

ஈரானின் கட்டுபாட்டில் செயல்படும் ஹிஸ்புல்லாஹ், ஹொதீக்கள் மற்றும் ஈராக், சிரியா நாடுகளில் தளத்தை அமைத்து வலிமையாக போரிடும் இஸ்லாமிய கூட்டு படைகள் ஒரு போதும் தங்கள் போர் குணாதிசயம் சார்ந்த செயல்பாடுகளை நிறுத்தி கொள்ள வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை.

அதேநேரத்தில் இந்த படைகள் அனைத்தும் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் விதத்தில் தான் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் அதற்கான தீர்வுகளை எட்டாத வரையில் சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த நிலையில் இதுவரையில் இந்த போரில் 45000 பொதுமக்கள் காசாவில் இஸ்ரேலிய ராணுவம் வீசிய குண்டு தாக்குதல் காரணமாக படுகொலை செய்யப்பட்டார்கள். 1,00000 மேற்பட்ட பொதுமக்கள் ஊனமுற்ற நிலையில் ஹமாஸ் இயக்கம் வலுப்பெற்று மீண்டும் மீண்டும் தாக்குதலை நடத்தி வருவதைக் காண முடிகிறது. கடந்த 55 க்கு உட்பட நாட்களில் 3500 லெபனான் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 15000 க்கு மேற்பட்ட லெபனான் பொதுமக்கள் காயமடைந்தனர்.

இப்படி இரண்டு தரப்பினரும் போரில் ஈடுபட்டு வரும் நிலையில் இஸ்ரேல் ராணுவமும் அதன் அரசியல் தலைமையும் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்கிற மனநிலையில் தொடர்ந்து தாக்குதலை நடத்தி அதனைத் நியாயப்படுத்தி வருவது வருங்கால யூத சமுகத்தினருக்கு மிகப் பெரிய அளவில் ஆன அசசுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

தற்போதைய நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு மற்றும் அவரது செயல்பாடுகள் மீது யூத மக்கள் மிகுந்த அளவில் அதிருப்தியை வெளிப்படுத்தி வருவதைக் காணலாம். இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் மீது சர்வதேச நீதிமன்றம் போர் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் இஸ்ரேலிய நாட்டில் மிகப் பெரிய அளவிலான பொருளாதார வர்த்தக முடக்கம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலிய ராணுவத்தில் பணியாற்றிய வீரர்கள் மீண்டும் களமுனையில் பணியாற்ற செல்ல தயங்கும் நிலை காணப்படுகிறது. ஏற்கனவே பெஞ்சமின் நிதான்யாகு போரியல் ஆய்வாளர்கள் மற்றும் அமைச்சரவை சகாக்கள் உடனான கூட்டத்தில் பேசும் போது தங்களிடம் போர் செய்ய அல்லது போரினை தொடந்து நடத்தக்கூடிய அளவில் வலிமையான ஆயுதங்கள் இல்லை என்று ஒப்புக்கொள்கிறேன் என்று கூறி உள்ளார்.

இதனை எல்லாம் நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது மத்திய கிழக்கு பகுதியில் யாரும் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும் என்பதே யதார்த்தமான நிலையாகும்...!

# வர்த்தகர்களின் பிடியில் சிக்கித் தவிக்கும் அரசு



எம்.எஸ். அமீர் ஹுசைன்



நாட்டில் தற்போது நிலவி வரும் அரிசி தட்டுப்பாட்டை தீர்த்து மக்களுக்கு நியாயமான விலையில் அரிசியை கிடைக்கச் செய்து சோற்றுக்கு வயிற்றில் அடிப்பதை நிறுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா முயற்சிகளை எடுத்திருக்கின்றார். ஜனாதிபதியின் உத்தரவுக்கமைவாக அரிசி ஆலை சொந்தக்காரர்கள் செயற்பட இருப்பதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதி வழங்கி இருக்கின்றனர்.

2024.12.07 ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வர்த்தக வாணி மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பிரதான அரிசி ஆலைகளின் சொந்தக்காரர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

அந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட விலையை நிர்ணயித்து அந்த விலைக்கு அரிசியை மொத்த விலையிலும் சில்லரை விலையிலும் விற்பனை செய்ய வேண்டும் என்ற உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

ஆனாலும் ஜனாதிபதியின் முன்னிலையில் ஆமா சாமி போடும் அரிசி ஆலை சொந்தக்காரர்கள் வெளியே வந்த பின்னர் சந்தையிலும் நேர்மையாக நடந்துகொண்டால் பிரச்சினை தீரும். இல்லாவிட்டால் மக்களது சோத்துக்குள் மண் விழும் நிலைதான் உருவாகும். ஜனாதிபதியின் உத்தரவுப்படி நாட்டரிசி ஒரு கிலோ மொத்த விலை 225 ஆகவும் சில்லரை விலை 230 ரூபாவாகவும் இருக்க வேண்டும். வெள்ளை அவியல் அரிசி மொத்த விலை 215 ரூபாவாகவும் சில்லரை விலை 220 ரூபா வாகவும், சம்பா அரிசி 235 ரூபா மொத்த விலையாகவும் 240 ரூபா சில்லரை விலையாகவும், கீரி சம்பா 255 ஆக மொத்த விலையும் 260 ரூபா சில்லரை விலையாகவும் அமைய வேண்டும். இதில் ஒரு கிலோவுக்கான இலாபம் 05 ரூபா மாத்திரமே. அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தலையிட்டு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விலையை விட மேலும் அதிகரிக்காமல் இருந்தால் அதனால் மக்களுக்கு நல்ல பிரதிபலன் கிடைக்கும். அவ்வாறில்லாமல் அரிசி ஆலை சொந்தக்காரர்கள் அவர்களது பாட்டில் விலையை நிர்ணயித்தால் அரிசியின் விலை 300 ரூபாவை தாண்டினால் சிரமங்களை அனுபவிப்பது பொதுமக்களாவர்.

இந்நிலையில் அரசாங்கத்தின் எதிர்வரும் 2025 ஜனவரி முதல் ஏப்ரில் 30 ஆம் திகதி வரையான நான்கு மாத காலப்பகுதிக்கான இடைக்கால கணக்கறிக்கை 2024.12.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. இந்த இடைக்கால கணக்கறிக்கையானது 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையான இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஆகும். இந்த இடைக்கால கணக்கு அறிக்கை மூலம் எதிர்வரும் 04 மாத காலத்திற்கு அரசாங்கத்தின் செலவுகளுக்காக, தேவைகளை ஈடு செய்வதற்காக 9,60,500 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஒவ்வொரு அமைச்சுக்குமான செலவீனங்கள், கடன் அடைப்பு, உட்பட பல தேவைகளுக்கான செலவுகளாக ஒதுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இந்த இடைக்கால கணக்கு அறிக்கை மீதான விவாதத்தின் போது எதிர்க்கட்சியினரின் ஒரே குற்றச்சாட்டாக இருந்தது அரசாங்கம் முன்னைய ரணிலின் வழியில் போகின்றது. எந்தவிதமான குறைவும் இல்லாமல் மீண்டும் கடன் வாங்க திட்டமிட்டிருக்கின்றது என்பதாகும். ஆனாலும் அரசாங்கத்தின் பதிலாக அமைவது ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை அரசாங்கம் மதித்து நடக்க வேண்டிய கடப்பாட்டில் இருப்பதால் எதையும் மீற முடியாது என்பதாகும்.

இதற்கிடையில் அரிசித் தட்டுப்பாடு எவ்வாறு ஏற்படுகின்றது என்ற விளக்கம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. கடந்த இரண்டு வாரங்களாக தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக நாட்டின் பல பாகங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்த 250,000 ஏக்கர் வயல் நிலங்கள் அழிந்து நாசமாகி உள்ளன. இந்த வயல் நிலங்கள் அனைத்தும் பயிரிடப்பட்டிருந்த நிலங்களாகும். அதனால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு ஜீவனோபாயத்தை இழந்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு நியாயமான நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு தேங்காய்க்கான தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் தேங்காய் விலை 200 ரூபாவுக்கும் மேல் சென்றிருக்கின்றது.

அரிசி, தேங்காய் என்று வரும் போது இவை இரண்டும் அத்தியாவசியப் பொருட்களாகவே கருதப்படுகின்றது. ஏழை மற்றும் வறிய குடும்பங்களின் பசியைப் போக்க அதிகமாக கைகொடுக்கும் உணவுப் பொருட்களாக இவை உள்ளன. இவ்விடயம் தற்போது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்ற விடயமாக மாறி இருக்கின்றது. அதனால் முதலில் அரசாங்கம் அரிசி தட்டுப்பாட்டுக்கு தற்காலிக தீர்வாக 2024 டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வரையில் அரிசி இறக்குமதியில் விதிக்கப்பட்டுள்ள சகலவிதமான கட்டுப்பாடுகளையும் தளர்த்தி அரிசி இறக்குமதிக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதற்கமைவாக இம்மாதம் 21 ஆம் திகதிக்குள் 50,000 முதல் 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யவும் திட்டமிட்டிருக்கின்றது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப் பட்டிருப்பதாக வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க 2024.12.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பொதுவாக நாட்டில் பாரிய அளவில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவி வருவதால் அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்வடைகின்றது. பொதுவாக பார்க்கின்ற போது குறிப்பிட்ட பொருளின் விலையை அதிகரிக்கச் செய்ய வேண்டுமானால் அந்த பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வேண்டும். ஆனாலும் இலங்கையில் போதுமான அளவில் விவசாயம் செய்யப்படுகின்றது. நெல் உற்பத்தி காரணமாக அரிசி உற்பத்தி இருக்கின்றது என்று கருதப்படுகின்றது. இரண்டு போகங்களுக்கு நெற் செய்கை பண்ணப்பட்டாலும் நாட்டில் புழக்கத்தில் அரிசிக்கு கணிசமான அளவில் தட்டுப்பாடு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தட்டுப்பாட்டை நெல் ஆலை உரிமையாளர்கள் திட்டமிட்ட அடிப்படையில் ஏற்படுத்துவதாகவும் அவர்களே அரிசி மாபியாக்கள் என்றும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது. ஆனாலும் பிரதான நெல் ஆலை சொந்தக் காரர்கள் அதனை மறுக்கின்றனர்.

எவ்வாறாயினும் இரண்டு போகங்களிலும் நாட்டில் மொத்தமாக ஒரு வருடத்தில் 30 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் பெரும் போகத்தில் 26 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடையும் சிறு போகத்தில் 22 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடையும் செய்யப்படுகின்றது. இந்த அளவு நெல் அரிசியாக வரும் பொது 30 இலட்சம் மெற்றிக் தொன் அளவு அரிசி உற்பத்தியாகின்றது. அவ்வாறு பார்க்கும் போது ஒரு வருடத்திதற்கு தேவைப்படும் அரிசியின் அளவு சுமாராக 20 இலட்சம் மெற்றிக் தொன் அளவாகும். அவ்வாறாயின் அரிசி உற்பத்தி தேவைக்கு அதிகமானதாக மாறி மேலதிக உற்பத்தி நடைபெறுகின்றது. ஆனாலும் அந்த மேலதிகமான 10 இலட்சம் மெற்றிக் தொன் அரிசிக்கு என்ன நடக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்த இடத்தில் தான் நெல் ஆலை சொந்தக்காரர்கள் மீதான சந்தேகம் வலுவடைந்து இவர்கள் அரிசியை பதுக்கி வைத்து விலையை அதிகரிக்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர். இருந்தாலும் இந்த புள்ளிவிபரங்கள் முற்றிலும் சரியானவை அல்ல. விவசாய அமைச்சிலும் கூட அரிசி பாவனை, உற்பத்தி, நுகர்வு தொடர்பாக துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லை.

ஆனாலும் விவசாய அமைச்சின் தகவல்களின் படி மேலதிக அரிசியில் கணிசமான அளவு உப உணவு உற்பத்திக்காகவும் செலவிடப்படுவதால் இவ்வாறான தட்டுப் பாட்டிற்கு காரணமாக அமைவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக நாட்டில் 02 கோடி கோழிகள் வளர்க்கப் படுகின்றன. இவை முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படும் கொழிகள். இந்த கோழிப் பண்ணையாளர்கள் நாளாந்தம் 90 இலட்சம் முட்டைகளை பெறுகின்றனர்.

அதில் ஒரு நாளைக்கு 85 இலட்சம் முட்டைகள் பல்வேறு தேவைகளுக்கான நுகரப்படுகின்றது. இந்தளவு கோழிகளுக்கு கோழித் தீன் உற்பத்திக்காகவும் அரிசி பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக ஒரு நாளைக்கு 1200 முதல் 1500 மெற்றிக் தொன் அரிசி கோழித் தீனுக்காகவும் பயன்படுத்தப்படுவதால் நாட்டில் அரிசி உற்பத்தி அபரிமிதமானதாக இல்லை. எவ்வாறோ தேவைக்கு மேலதிகம் என்ற நிலை இல்லாமல் சராசரியாகவே இருந்து வருகின்றது. அதன் காரணமாகவே தட்டுப்பாடு ஏற்படுவதாக விவசாய அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் நாட்டில் இடியப்பம், பிட்டு போன்ற உப உணவு உற்பத்திகளுக்காக வெள்ளை அரிசி மாவாக்க பயன்படுத்துவதாலும் நுகர்வுக்கான அரிசி சந்தையில் தட்டுப்பாடாக வாய்ப்பு இருக்கின்றது.

எவ்வாறாயினும் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு உக்கிரமடையும் போது உள்நாட்டில் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றது. அதனால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவிப் பொது மக்களாவர். இந்நிலையில் தான் தேங்காய் விலை உயர்வாலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களாவர். அன்றாடம் தோட்ட வேலைக்கு செல்லும் குடும்ப பெண்கள் பிரதான உணவாக

ரொட்டியை தயாரிக்க தேங்காயை பயன்படுத் துவதால் இந்த 200 ரூபா வரையிலான தேங்காய் விலை உயர்வும் தட்டுப்பாடும் அவர்களின் அன்றாட வாழ்க்கையை மேலும் பாதிக்கச் செய்திருக்கின்றது. அதுபற்றி அமைச்சர் சமரசிங்க தெரிவிக்கையில் இரண்டு வாரங்களுக்குள் 10 இலட்சம் தேங்காய்களை குருணாகலையில் அமைந்துள்ள தேங்காய் ஆராய்ச்சி மையம் ஊடாக விநியோகிக்கவும் அவற்றை சதொச முகவர் விற்பனை நிலையங்கள் மூலம் 110 ரூபா விலையில் விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கடந்த 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார். ஆனாலும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு 10 இலட்சம் தேங்காய்கள் ஒருநாளைக்கும் போதுமானதல்ல. தேங்காய்கள் தினப் பாவனைக்குரியவை. ஆதனால் தினமும் போதுமான அளவு தேங்களாய்களை விநியோகிக்க நடவடிக்கை தேவை. தற்போது அரிசிக்கு ஏற்பட்டுள்ள நிலை போன்று தேங்காய்களும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் நிலை ஏற்படுமா என்ற அச்சம் நிலவுகின்றது.

எவ்வாறாயினும் தேங்காய் அறுவடையானது பருவ கால நிகழ்வாக நடப்பதாகும். சில காலப்பகுதிக்கு தேங்காய் காய்ப்பு குறைவானால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்வு ஏற்படுகின்றது.

அத்துடன் நாட்டில் சபரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் குரங்குத் தொல்லை அதிகரித்திருப்பதால் அவை தேங்காய் காய்ப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன. ஆனாலும் குரங்கை ஒழிக்க நடவடிக்கை எடுக்காமல் அவை வாழ வேண்டும் என்ற கோட்பாடு காரணமாக மனித வாழ்க்கைக்கு எத்தகைய அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் என்ன என்ற செயற்பாடே மேலோங்கி வருகின்றது. ஒருபுறம் மக்கள் யானைகளின் தொல்லை காரணமாக வாழ முடியாமல் திண்டாடுகின்றனர். மறுபுறம் குரங்குகளால் விவசாயம் மற்றும் தென்னை உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண தெரியாமல் அரசாங்கம் நிலைகுலைந்து போய் இருக்கின்றது.

# சவால்களை எதிர்கொள்ளக் கூடிய புதிய திட்டங்களோடு பயணிப்பதற்கு மட்டு. மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனம் தீர்மானம்





(எம்.பஹத் ஜுனைட்)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் ஞாயிற்றுக் கிழமை (01) ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயலாளர் ஊடகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சுமார் 25 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் , மட்டக்களப்பு மாவட்டம் முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் உருவாக்கம், அதன் செயற்பாடுகள், கடந்த காலங்களில் எதிர் நோக்கிய சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து சம்மேளனச் செயலாளர் பாரிஸ் எடுத்துரைத்ததுடன் அமைப்பின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு ஏதுவான ஆக்கபூர்வமான கருத்துக்கள் சக ஊடகவியலாளர்களால் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்தும் நிலையான திட்டங்களோடு இவ் அமைப்பினால் கொண்டு செல்லப்பட வேண்டிய முக்கியத்துவம் குறிந்து சிரேஷ்ட ஊடகவியலாளர்களான ஏ.எச்.ஏ./ஹுஸைன், ஏ.ஜீ. அப்துல் கபூர், எம்.ஐ.பாறூக், எம்.எஸ்.எம்.சஜி, எம்.ஏ.சி.எம்.ஜெலீஸ், எம்.எச்.எம். அன்வர்,எம்.எப்.எம்.பஸால் ஜிப்ரி, எம்.ஐ.அப்துல் நஸார்,எம்.பஹத் ஜுனைட் ஆகியோரால் ஆக்க பூர்வமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அமைப்பின் தொடர்ச்சியான வெற்றிகரமான செயற்பாட்டிற்கு இளம் ஊடகவியலாளர்களை ஊக்கப்படுத்துதல், அவர்களுக்கு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாகவும், மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதற்கான தீர்வுகளை நாடி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் இக்கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்களும் முன்மொழியப் பட்டு நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எச்.எம்.எம். ஹமீமுக்கு அவரது இன, மத வேறுபாடற்ற சேவையைப் பாராட்டி மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க தாகும்.

# ஊடகவியலாளர் றிபாஸிற்கு தேசிய சாரணர் விருது





நீண்ட காலம் சாரணியத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.எப்.றிபாஸ் தேசிய சாரணர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

# நாச்சியாதீவு பிரதேச செயலக கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை

(எம்.ரீ.ஆரிப்)

நாச்சியாதீவு பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட பஹேஎல, சிராவஸ்தி புர,மொரகொட, வதாகட ,கல்வடுவாகம மற்றும் கொடிகல ஆகிய கிராமங்களில் காட்டு யானைகள் கூட்டமாக உள்நுழைவதால் கிராம மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவித்தனர்.

இந்த காட்டு யானைகள் கூட்டமாக திரிவதால் தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்ச்செய் கைகளை சேதமாக்கி வருவதுடன் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்த கிராமங்களில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் அத்தியாவசிய தேவைகளுக்காக கூட வீட்டை விட்டுவெளியே செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என கிராம மக்கள் தெரிவித்தனர்.

# கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா





(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)

கற்பிட்டி அந்நூர் பாடசாலையின் 31 வது வருடாந்த சிறுவர் கலை விழா நிகழ்வு வியாழக்கிழமை (5) கற்பிட்டி சியாப் திருமண மண்டபத்தில் அந்நூர் இளைஞர் கழகத்தின் தலைவர் எஸ்.ஏ.எம் நியாஸ்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ்.டி எம்.பைறுஸ மான் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ்.எம் அருஸ், அல் ஹிறா பாடசாலையின் அதிபர் எம் எம். எம் நவ்ப் மற்றும் செடோ சிறீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முனாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலை சிறார்களின் கலைத் திறமைகள் வெளிப்படும் வகையில் கலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை பாடசாலையின் அதிபர் அருஸியா தலைமையிலான ஆசிரியர் குழாம் மேற்க் கொண்டதாகவும் பெற்றோர்களின் பங்களிப்பும் முழுமையாக வழங்கப்பட்டதாகவும் அந்நூர் இளைஞர் கழகத்தின் செயலாளர் ஏ.எம் நாசர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது

# கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி தேசிய கல்வியாளர் விருது பெற்றார்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

நிந்தவூரைச் சேர்ந்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தகவல் தொழிநுட்ப சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி, தகவல் தொழிநுட்பக் கற்கைகளில் சிறப்பான பங்களிப்புக்காக தேசிய கல்வியாளர் விருதைப் பெற்றார்.

தகவல் தொழிநுட்பத்திலும், Innovation, Digital Education, E-Commerce போன்ற துறைகளிலும் இளைஞர்களை ஊக்குவிக்கவும், கல்வி மற்றும் பல்கலைக்கழக நுழைவு ஆலோசனைகளிலும் அவர் குறிப்பிடத்தகுந்த பங்காற்றியுள்ளார். அவரது கற்பித்தல், ஆய்வு மற்றும் சமூகப் பங்களிப்புகளை கருத்தில் கொண்டு இந்த உயரிய விருது வழங்கப் பட்டுள்ளது.



கலாநிதி எப். எச் அஹமட் ஷிப்லி கிரேட் மைண்ட் கெம்பஸ் (Great Minds Campus) நிறுவனத்தின் தலைமை கல்வி ஆலோசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் நினைவரங்கில் வலம்புரி கவிதா வட்டத்தின் 106 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 106 ஆவது கவியரங்கம் இம்மாதம் 14 ஆம் திகதி (14/12/2024) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் நினைவரங்கில் இடம்பெறும் கவியரங்கிற்கு கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் தலைமைத் தாங்குவார். ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகிப்பார்.



கவியரங்க ஏற்பாடுகளை வகவத் தலைவர் நஜ்முல் ஹுஸைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழகணேஷ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்திய மாகாண கல்வி அமைச்சின் புதிய செயலாளர் பதவியேற்பு

(ரஷீத் எம். றியாழ்)

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த எச்.எம்.மதுபானி பியசேன மத்திய மாகாண கல்வி அமைச்சினதும் முதலமைச்சினதும் செயலாளராக 9ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னாள் மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக பணியாற்றிய இவர் கண்டி ஹில்வுட் கல்லூரி மற்றும்



கண்டி பெண்கள் உயர்தரக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.






நாச்சியாதீவு பர்வீன்

# ஜியோங் ரோங்கின் “ஓநாய் குலச்சின்னம்”

தமிழில் சி. மோகன்
(பொன் விஜி - சுவிஸ்)

‘ஓநாய் குலச்சின்னம்’மேய்ச்சல்நில வாழ்க்கை பற்றிய ஒரு வரலாற்றுப் புனைவு. சுய வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் உருவாகியிருக்கும் மிகவும் அற்புதமான படைப்பு.

இதன் ஆசிரியர் ஜியாங் ரோங். தமிழில் சி. மோகன் மிக நேர்த்தியாக மொழி மாற்றம் செய்திருக்கிறார். வாசிப்போர் மங்கோலிய மேச்சல் நிலத்தில் அந்த ஓநாய்களின் தந்திரங்களையும் ஆடுகள் மேய்பதையும் இன்னும் பலவற்றை நம் கண்முன் நிறுத்துகின்றன.

இளைஞர்களும் மாணவர்களும் மலைப்பகுதிகளுக்கும் கிராமப்புறங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களோடு இணைந்து வாழ்ந்து உழைக்க வேண்டும் என்று மாவோ சொன்ன சிந்தனையை ஏற்று உள்மங்கோலியாவின் மிகவும் தொன்மையான மேய்ச்சல் நிலத்துக்கு, ‘நான் பழமை’களான பழைய சிந்தனை, பழைய கலாசாரம், பழைய சடங்குகள், பழைய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நீக்கி, புரட்சி சிந்தனை உள்ள 4 பேர் கொண்ட சீன மாணவர்கள் அங்கு அனுப்பப்படுகிறார்கள் . அதில் இருவர் ஆடுமேய்ப்பர்களாகவும்,ஒருவன் மாடு மேய்ப்பனாகவும், ஒருவன் குதிரை மேய்ப்பனாகவும் – மேய்ச்சல் தொழிலைத் தொடங்குகிறான்கள். இவர்களில் ஒருவனான ஜென் செனும் ஓநாயும்தான் நாவலைக் கொண்டு செல்கின்றனர்.

ஜென் சென் அங்கு 11 வருடங்கள் தங்கியிருந்து, மேய்ச்சல் நிலத்தின் எப்படி ஓநாய்களுடன் அந்த நாடோடி மக்கள் வாழ்கிறார்கள், அவர்களின் கடவுள் யார்? அவர்களுடைய மிகக் கடினமான வாழ்க்கைமுறை, அவர்களின் பண்புகள், அவர்களது உணவு, வியாபாரம், வருடத்தின் பருவகாலத்திற்கேற்ப இடமாற்றம், அவர்களது வேட்டையாடும் தந்திரங்கள் இப்படியாகப் பல விடயங்களையும் மிக உன்னிப்பாக உற்று நோக்குகிறார்.

பில்ஜி என்பவர்தான் ஜெனின் குருவாகவிருந்து எல்லாவிதமான நெறிமுறைகளையும் கற்பிக்கிறார். இங்குள்ள மேய்ச்சல் நிலத்துக்கு சொந்தமான விலங்குகள் என்றால் அவை ஓநாய்களும், ஆடுகள், மாடுகள், குதிரைகள், நாய்கள். ஆனால் மேச்சல் நிலத்தை அழிப்பவை என்றால் அவை மான்கள், நரிகள், மர்மோட்டுக்கள், எலிகள் தான்.

மங்கோலியர்கள் ஓநாயை தங்கள் குலச் சின்னமாக நினைப்பதற்கு அவர்கள் கூறும் காரணம், நிலத்தில் விளையும் பயிர்களை மான்களும், மரமோட்டுகளும், எலிகளும் நாசப்படுத்தி விடுவதால் அங்குள்ள மக்கள் பட்டினியால் கஷ்டப்பட நேரிடும். இதனால் ஓநாய்கள் அவற்றை தகுந்த முறையில் வேட்டையாடுவதால் பயிர்கள் காக்கப்படுவது மட்டுமல்லாமல் அவர்களின் மந்தைகளும் குதிரைகளும் குறைந்தளவில் ஓநாய்களுக்கு இரையாகின்றன என்பதே.

மங்கோலியர்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்றும் அவர்களின் தந்தையை டெஞ்ஞர் என்றும் மேச்சல் நிலத்தைத் தாய் என்றும் குறிப்பிடுகிறார்கள். இன்னொரு இடத்தில் டெஞ்ஞரிடம் போவதென்றால் அதை சொர்க்கத்திற்கான அழைப்பு என்று மிக தீவிரமாக நம்புகிறார்கள். அவர்களின் மேய்ச்சல்நிலத்தில் கடும் பனி அல்லது வறண்ட புயல், மழை இவை மிக மோசமாக இருக்கும் காலங்களில், டெஞ்ஞர் மிகவும் கோபமாக இருக்கின்றார் அதனால்த் தான் இப்படி நடக்கிறது என்ற நம்பிக்கை உடையவர்கள்.




இறந்தவர்களின் உடல்களை அவர்கள் எரிக்கவோ அல்லது தாக்கவோ மாட்டார்கள். பதிலாக அதனை ஓலான்புலாக்கின் மிக உயர்ந்த மலைகளில் வைத்துவிட்டு வருவார்கள். பின் அதனை ஓநாய்கள் சாப்பிடும் அல்லது அங்கு வாழும் இராட்சதக் கழுகுகள் ஒருபகுதியும் விடாமல் சாப்பிடு முடித்தால் அந்த உடலுக்குரியவர் டெஞ்ஞரிடம் சென்றுவிடதாக டெஞ்சருக்கு நன்றி தெரிவிப்பார்களாம். மிகவும் அழுகிய மாமிசத்த்க்கூட ஓநாய்கள் சாப்பிடுமாம். கோடைகாலப் பருவத்தில் ஓநாய்கள் மிருகங்களை வேட்டையாடி குகைகளுக்குள் ஒழித்துவைத்து பின் பனி காலங்களில் அவற்றை உண்டு வாழும் என்று விபரிக்கிறார் ஜியோங் ரோங்.

உலகத்தையே உலுக்கிய சில மன்னர்களில் ஜெங்கிஸ்கானும் ஒருவன். அவன் பல விதமான போர் தந்திரங்களைக்கூட இந்த ஓலோன்புலாக் ஓநாய்கள் மூலமாகவே கற்றான். ஐரோப்பிய, பாரசீக, ரஷ்ய, நாடுகளையே வென்று ஆட்சி அமைத்ததற்கு மங்கோலிய ஓநாய் களிடமும் குதிரைகளிடமும் இருந்து கற்றதே காரணம் என்று எழுதுகிறார் ஆசிரியர்.

மங்கோலியரவிற்கு 1967 ல் தான் ஜென் சென் சென்றார். அப்போ கிட்டத்தட்ட 53 வருடங்களுக்கு முன் அவர்களுடைய வியாபாரம் சிறிதளவேனும் பண்டமாற்றாகவும் சிறிதளவு பணத்துடனும் இருந்ததை எப்படி என்று விபரிக்கிறார் ஜென். அவர்களின் உணவில் இறைச்சியின் பங்கே முதலிடம் வகித்தது. ஓநாய்கள், மான்கள், மர்மோட்டுக்கள், ஆடுகள் இவற்றின் தோல்களை விற்று கிடைக்கும் பணத்துடன் சிறு தானியங்களும் தான் இவர்களின் வருமானம்.

இங்கே ஜென் சென்னும் ஒரு ஓநாயை எடுத்து வளர்க்கிறார். எப்படி அதனை எடுத்து வளர்க்கிறார், அதனுடன் ஏற்படும் பிரச்சனைகள், கடைசியில் என்ன முடிவாக அமைகிறது போன்ற மிக சுவாரஸ்யமான பல தகவல்களை அறிய நண்பர்களே நாவலைப் படியுங்கள்.

ஜென்னும் யாங்கும் 20 வருடங்களுக்குப் பின் மீண்டும் உள்மங்கோலியாவிற்குச் சென்று பார்த்தபின் அங்கு நிலமை மிகவும் மாறுபட்டிருப்பதை கண்டு மனம் வருந்தினார்கள்.

இங்கும் சில அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்திருந்ததை அவர்கள் உணர்ந்தார்கள். அங்கு நிர்வாக மாற்றம் காரணமாக ஓநாய்கள் அழிக்கப்பட்டு மர்மோட்டுக்களும் எலிகளும் அதிகமாகக் காணப்பட்டதாக ஜென் சென் கூறுகிறார்.

நண்பர்களே, மங்கோலியர்களின் வாழ்க்கை எப்படி சிதைந்தது, ஓநாய்கள் எப்படி அழிக்கப்பட்டன, அதனை ஒரு குலச்சின்னமாக ஏன் கருதினார்கள், அங்குள்ள ஓநாய்கள், குதிரைகள், மர்மோட்டுக்கள், எலிகள் மான்கள், இவற்றின் பல சிறப்பம்சங்களையும், மேலும் நிறைய நாம் அறியப்படாத பல உண்மைகளைச் சுமந்துவரும் இந்த நாவல் கண்டிப்பாக எல்லோரும் வாசிக்கவேண்டும்.

# கருணையின் மொழி...

நேசத்தின் விழுதுகள்
விரல்களாய் மாறி
தலைகோதும் போது
கருணை கண்சிமிட்டும்

பாசத்தின் ஊற்றுக்கண்
பருவத்தில் முளைத்து
வாசப் பூவாக
வாழ்த்துப்பாடும்

வேசம் இல்லாத
விலாசத்தில் வாழும்
பறவையைப் போல
குதூகலிக்கும் நெஞ்சம்

யாரென்று தெரியாத
யாருக்காகவோ
இரக்கப்படும் இதயம்
கருணை கொண்டது

பிறர்துன்பம் கண்டு
மனம் வருந்தும்போது
பிறக்கின்ற மனிதம்
புனிதம் கொண்டது

ஏழைக்கு உதவும்
ஏற்றமிகு மனசு
போற்றத் தக்கது
பொன்னிலும் உயர்ந்தது

ஜீவிதம் முழுக்க
ஜீவகாருண்யம்
அன்பின் விழுதுகளாய்
அரவணைக்கும் வாழ்வை

கொடுத்து வாழும்
வெள்ளை மனசு
கொள்ளை இன்பம்
கொண்டு வரும்

கருணையின் மொழி
கலங்கமற்ற பன்னீர்
கரங்களில் சுரக்கும்
வியர்வைக் கண்ணீர்

எல்லையற்ற வெளியில்
மனிதனுக்குள் புதைந்து
அடைந்து கிடக்கிறது
கருணையின் மொழி.

-அபூ ஸெய்னப்-

# டில்வின் சில்வாவுடன் தேசிய ஷூரா சபையின் சந்திப்பு

தேசிய ஷூரா சபையின் உயர்மட்டக் குழுவொன்று வெள்ளிக்கிழமை (06.12.2024) மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கட்சியின் செயலாளர் திரு.டில்வின் சில்வாவை பத்தரமுல்லையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் சந்தித்து பரஸ்பர ஒத்துழைப்புடன் தொடர்பான விடயங்கள் பற்றியும்தேசிய மற்றும் சமூக பிரச்சனைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளது.

தூதுக்குழுவில் தேசிய ஷூரா சபையின் தலைவர் அஷ்ஷேக் எஸ்.எச்.எம். ஃபளீல், அதன் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈரான் நாட்டுக்கான முன்னாள் தூதுவரும் தேசிய ஷூரா சபையின் முன்னாள் உபதலைவர்களில் ஒருவருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம்.சுஹைர், சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி ரீ.கே .அஷூர் மற்றும் சபையின் தற்போதைய துணைத் தலைவர், சவூதி அரேபியாவுக்கான முன்னாள் தூதர், மூத்த வழக்கறிஞர் ஜாவித் யூசுப் ஆகியோர் அங்கம் வகித்தனர். சபையின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு மற்றும் வழிநடத்தல் குழு உறுப்பினர் அஷ்ஷேக் ஐ.என்.இக்ராம் அவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்:

1.முஸ்லிம் அமைச்சர் நியமன விவகாரம்

அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாதது குறித்து முஸ்லிம் சமூகத்தில் பல்வேறுபட்ட கருத்தாடல்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என முஸ்லிம்கள் கோரிக்கை விடுப்பதற்கு காரணம் முஸ்லிம்களுடைய விவகாரங்களை அணுகுவதற்கும் அவற்றிற்காக குரல் கொடுப்பதற்கும் அமைச்சரவை மட்டத்தில் முஸ்லிம்கள் இருப்பது பொருத்தம் என்று கருதுவதாகும் என்றும் தற்போதைய சூழலில் அப்படியான நிலை இல்லை என்றும் அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் அரசு இயந்திரத்தில் இருக்க வேண்டும் என்றும் குழுவினர் சுட்டிக் காட்டினர்.



2. ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது

முஸ்லிம்களுடைய விவகாரங்கள் தொடர்பாக அரசு எந்தவொரு தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த துறை சார் நிபுணர்கள், புத்திஜீவிகள் போன்றரது ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

3. நிபுணத்துவத்தை பெற்றுக் கொடுத்தல்

முஸ்லிம் சமூகத்தில் கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் நிபுணத்துவம் மிக்க, சமூக ஆர்வம் கொண்ட புத்தி ஜீவிகள் கணிசமான தொகையினர் இருப்பதாகவும் அவர்களது ஆலோசனைகளை நாட்டின் வளர்ச்சிக்கு பெற்றுத் தருவதற்கு தேசிய ஷூரா சபை தயாராக இருப்பதாகவும் குழுவினர் வலியுறுத்தினர்.

4. பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வுகளுக்கு முன்னுரிமையளித்தல்

இலங்கை தேசம் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருப்பதால் மக்கள் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கு முஸ்லிம் சமூகத்தின் ஆதரவை தேசிய ஷூரா சபையின் பிரதிநிதிகள் உறுதியளித்ததுடன், அரபு இஸ்லாமிய நாடுகளுடனான தொடர்பை மென்மேலும் வலுப்படுத்தி அந்த நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் இது தொடர்பில் அந்த நாடுகளுடன் தொடர்புகளை கொண்டிருக்கும் இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தோர் அரசுக்குத் தேவையான ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்க முடியும் என்றும் கூறினர். அரபு, இஸ்லாமிய நாடுகளில் சுமார் 2மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர் தொழில் செய்கின்றனர். இதனால் வருடாந்த வெளிநாட்டுச் செலாவணியாகிய 6 பில்லியன் அமெரிக்க டொலரில் 85% க்கும் அதிகமான தொகைப் பணம் கிடைத்து வருவதால் அந்த நாடுகளுடனான நல்லுறவினதும் தொடர்பினதும் முக்கியத்துவத்தை குழுவினர் வலியுறுத்தினர்.

5. முஸ்லிம்கள் நாட்டுக்கு விசுவாசமானவர்கள்

இலங்கை தேசத்தின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு என்பன பேணப்பட வேண்டும் என்பதில் முஸ்லிம் சமூகம் எப்போதும் உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் முஸ்லிம்கள் நாட்டுக்கு விசுவாசமானவர்கள் என்பதையும் கடந்த காலங்களில் பிரிவினை வாதத்திற்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்காததன் காரணமாக குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் பல்வேறுபட்ட துன்பங்களுக்கு உள்ளானது பற்றியும் தற்போதும் கூட கணிசமான தொகையினர் அகதி முகாம்களில் வாழ்வதையும் குழுவினர் சுட்டிக்காட்டினர்.

6. இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை பாராட்டல்

முப்பது வருட யுத்தம் முடிவடைந்ததற்கு பின்னர் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத செயற்பாடுகளால் முஸ்லிம் சமூகம் பாரிய அளவு பாதிக்கப்பட்டிருப்பதையும் இனவாதம் இந்த நாட்டுக்கு ஒரு பேராபத்து என்பதையும் குழுவினர் சுட்டிக்காட்டியதுடன் தேசிய மக்கள் சக்தியின் இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டையும் பாராட்டினர்.கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அல்லாமல் கல்வி, உரையாடல் மற்றும் நல்லிணக்கத்தின் மூலம் இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர்.

7. சமாதான சகவாழ்வு வேலை திட்டங்கள்

இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை கட்டியெழுப்பவும் முஸ்லிம் சமூகத்தை இது தொடர்பாக நெறிப்படுத்தவும் வலுவூட்டவும் கடந்த காலங்களில் தேசிய ஷூரா சபை கணிசமான வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்தியதாக நினைவுபடுத்திய குழுவினர், குறிப்பாக தற்போது பிரதி அமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள அஷ்ஷைக் முனீர் முளப்பர் அவர்கள் சமாதான சகவாழ்வு வேலை திட்டங்களுக்காக தேசிய ஷூரா சபையுடன் கடந்த காலங்களில் மிக நெருக்கமாக இருந்து செயல்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன் இது போன்ற வேலை திட்டங்களை எதிர்காலத்திலும் செயல்படுத்துவதற்கு ஷூரா சபை தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

8. தேசிய ஷூரா சபை பற்றிய அறிமுகம்

தேசிய ஷூரா சபையின் நோக்கங்கள், இலக்குகள்,அதன் கட்டமைப்பு,கடந்த கால செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்கிய குழுவினர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முஸ்லிம் சமூகத்தோடு தொடர்பான 27 அம்சங்களை உள்ளடக்கிய கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுவை தேசிய மக்கள் சக்தி அமைப்புக்கு கையளித்தமையை நினைவுபடுத்தியதுடன் அதில் உள்ளடங்கிய அம்சங்கள் தொடர்பாக மேலும் கலந்துரையாடுவதற்கு சபை தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டனர். அந்த மனுவின் பிரதி ஒன்றையும் திரு.அனுர குமார திஸ ாநாயக்க அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவருக்கு ஷூரா சபை அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் பிரதியையும் ஷூரா சபை பற்றிய அறிமுகத்தை கொண்ட ஓர் ஆவணத்தையும் உள்ளடக்கிய கோப்பொன்றை குழுவினர் திரு. டில்வின் சில்வா அவர்களுக்கு கையளித்தனர்.

9. ஜே.வி.பி செயலாளரின் பதில்:

குழுவினரது கருத்துக்களை செவிமடுத்த செயலாளர்கள் இந்த அரசு இன ரீதியான அடிப்படையில் எதனையும் நோக்குவதில்லை என்றும் இனவாதத்தை அது கடுமையாக எதிர்க்கிறது என்றும் குறிப்பாக அண்மை காலத்தில் மூவர் இனவாதத்தை தூண்டும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது அவர்கள் கைது செய்யப்பட்டதையும் நினைவூட்டினார். ஒவ்வொரு இனத்தினதும் சமயம், மொழி, குறிப்பாக ஆடை கலாச்சாரம் போன்ற தனித்துவங்களில் இந்த அரசு தலையிடமாட்டாது என்பதையும் அவற்றை பாதுகாப்பதற்காக அது எப்போதும் முன்னிற்கும் என்பதையும் வலியுறுத்தினார்.

கடந்த தேர்தலில் அனைத்து இனத்தவர்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவ்வித வேறுபாடுகளையும் பார்க்காமல் வாக்களித்திருப்பதை குறிப்பிட்ட அவர், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமது கட்சி பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கது என்றும் எதிர்பாராத இடங்களில் கூட முஸ்லிம் வேட்பாளர்களுக்கு முஸ்லிம் அல்லாதவர்களது வாக்குகள் கிடைத்திருப்பதானது மக்களது மனப்பாங்கில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்தை காட்டுவதாகவும் தெரிவித்தார்.

## மனநலமும் ஆலோசனையும் 60

# வளமான மங்களகரமான வார்த்தைகள்

நாம் நினைக்கின்றோம்.

நினைத்துவிட்டு பேசுகின்றோம்.

நாம் நினைக்கின்றவை பெரும்பாலும் எமது வாயிலிருந்து வெளியே பாய்ந்து மற்றொருவரின் காதுகளில் இலேசாக புகுந்துகொள்கின்றன.

அப்படி மற்றவர் காதுகளில் புகுந்துவிட்ட வார்த்தைகளை எம்மால் ஒருபோதும் வெளியே எடுத்துவிட முடியாது.

மற்றவர்கள் எம்மை பற்றி நினைக்கின்ற அவ்வாறே உணர்கின்ற விதத்தில் நாம் வெளிப்படுத்தும் வார்த்தைகள் பெரும் தாக்கம் செலுத்துகின்றன.

எமது தலைக்குள் நடக்கின்ற விடயங்களை மற்றவர்களுடன் தொடர்புகொள்ள வைக்கின்ற முக்கிய அடையாளமாக இருப்பது எமது வார்த்தைகள்.

– நாம் எமது கவலைகளையும் கனவுகளையும் வார்த்தைகளால் பகிர்ந்துகொள்கிறோம்.

– அன்பையும் ஆனந்தத்தையும் வார்த்தைகளால் பகிர்ந்துகொள்கிறோம்.

– கோபத்தை, வெறுப்பை வார்த்தைகளால் பகிர்ந்து கொள்கிறோம்.

– சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலருடன் வார்த்தைகளால் தொடர்பு கொள்கிறோம்.

– எங்களது இந்த வார்த்தை பரிமாற்றத்தின் உண்மை நிலை என்ன..

– நாங்கள் மற்றவர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தும் எங்கள் வார்த்தைகளின் தரம் என்ன

– எங்கள் வார்த்தைகள் மற்றவரின் மனதில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன....

என்று கொஞ்சம் தேடிப் பார்க்க இப்போதே ஒரு சிறிய நேரத்தை ஒதுக்கி சிந்தனை செய்வோம்.

இது எங்களை தரமான தொடர்பாளர்களாக மாற்றிக் கொள்ள வழிவகுக்கும்.

பேசும் வார்த்தைகள் மக்களுக்கு இடையிலான முக்கிய பாலம் என்பதை நாம் அறிவோம். மக்களை இணைக்கும் வலுவான சக்தி நாம் பேசும் வார்த்தைகளிடம் உள்ளது.

- நாம் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா?

– நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தருகின்றனவா? அல்லது

– மற்றவர்களை எரிச்சலூட்டுவதாக அல்லது வருத்தப்படுவைப்பதாக இருக்கின்றனவா?

என்று நாம் எப்போதாவது அலசி ஆராய்ந்து பார்த்திருக்கிறோமா?

– நாம் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தால் அவற்றில் அடங்கியுள்ள உண்மைத் தன்மையை தெளிவாக புரிந்து கொள்ளலாம். அவற்றின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

– வார்த்தைகள் ஒருவரை குணப்படுத்தலாம், வார்த்தைகள் ஒருவரை காயப்படுத்தலாம்.

எங்கள் வார்த்தைகள் இதில் எதைச் செய்கின்றன?

– மற்றவர்களுடன் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான உறவை உருவாக்குவதில் வார்த்தைகள் சக்திவாய்ந்த கருவியாக இருக்கின்றன. நாம் எம்மையே கேட்டுப் பார்ப்போம்..!

இதுவரை நாம் பேசிய வார்த்தைகளால் எத்தனை மக்களின் இதயங்களை வென்றுள்ளோம்? எத்தனை மக்களின் இதயங்களை சேதப்படுத்தியுள்ளோம்?

இதற்கான பதில் எங்களுக்கு மட்டுமே தெரியும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "தொற்று நோய் கிடையாது பறவை சகுனம் கிடையாது. ஆனால், நற்குறி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது" என்று கூறினார்கள். மக்கள், "நற்குறி என்றால் என்ன?" என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "மங்கலகரமான நல்ல சொல்" என்று பதிலளித்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி : 5776)

ஒரு சகோதரனின் முகத்தை புன்முறுவலுடன் பார்ப்பது ஸதகா என்றால் மற்றவருடன் அழகாக பேசுவது எவ்வளவு பெரிய ஸதகாவாக இருக்கும்.

நாங்கள் பேசும் வார்த்தைகள் மக்களுக்கு மனமகிழ்ச்சியை தரும் விதத்தில் இருந்தால் நாம் அழகாகவும் கௌரவமாகவும் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்கள் உள்ளத்தை குளிர்மைப்படுத்தி இருக்கிறோம் என்று பொருளாகி விடும்.

மங்கலகரமான நல்ல வார்த்தைகளாக எங்கள் வார்த்தைகள் வெளிவரட்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்




பயாஸா பாஸில்

# யாரும் நம்மை தேடமாட்டார்கள்!



ஒரு நாள் நாம்
இல்லாவிட்டால்
யாரும் நம்மை
தேடமாட்டார்கள்..
மனைவியாக
இருந்தால்
கணவனை
தேடுவாள்..
காதலியாக
இருந்தால்
காதலனை தேடுவாள்.
பெற்றோர் ஆக
இருந்தால் குழந்தையை
தேடுவார்கள்..


அதைத்தாண்டி வேறெந்த உறவு
தினமும் தேடுவார்கள்..?
செல்லாப்போனால்
அப்படியாருமே
தேடுவதில்லையே!..
ஆம் அப்படித்தானே..

பேசாத நிமிடத்தில் என்ன நடந்து
இருக்குமோ?..
எதற்காக ஒன்லைனில் இல்லை..?
என அவளுக்குள் இருந்த
அத்தனை மனப்போரட்டம் ..

அவளின் ஏக்கத்தை
உணர ஆரம்பித்தது
ஒன்லைனில் வந்தவுடன்தான்..

நம்மை எந்த எதிர்ப்பும் இன்றி
தேட இந்த உலகில் ஓர் ஆன்மா
இருக்கின்றது.
நட்பின் சிகரம்
உணர்வுகளின் சங்கிலி
அந்த ஆன்மா தான் அவள்

- பஹ்ரியாபாயிஸ் -



# சிந்திக்க சில நிமிடம்....

- முயற்சிக்காமல் இருப்பது, வாய்ப்புகள் தோன்றியும் அதிர்ஷ்டமே கைக்கொடுக்கும் என எண்ணுவது,

தலைக்கனம் கொண்டு செயலற்று இருப்பது இவையாவும் தோல்விக்கான படிகள்.

- முயற்சி செய்தும் எந்த பலனும் ஏற்படவில்லை என்றால் பொறுமை கொண்டிருங்கள்.

- நீங்கள் செல்லும் பாதை செய்யும் செயல்கள் யாவும் சரிதானா என்பதை கண்டறியுங்கள். முயற்சியே வெற்றிக்கு மூலதனம்..



# எப்படி எல்லோர் மனதிலும் இடம் பிடிப்பது!

– பஸ்லா காதர் –

அனைவரும் விரும்புவது அனைவர்களதும் மனதிலும் இடம் பிடிப்பதற்கு தான். ஆனால் எப்படி இடம் பிடிப்பது என்பது அநேகமானோருக்கு தெரிவதில்லை. இருந்தும் பலர் பலருடன் பேச, பழக விரும்பி விடுவார்கள். பிறர் மனதில் தானாக இலகுவாக இடம் பிடிப்பதற்கும் பிறரும் தங்களை விரும்புவதற்கும் முதலில் செய்ய வேண்டியது உண்மையாக இருப்பது.

இது ஒன்றே போதுமானதாக உள்ளது. இரண்டாவதாக பிறரை மரியாதைகொண்டு நடாத்த தெரிந்தால் போதுமானதாக உள்ளது. மூன்றாவதாக அன்பு செலுத்தினால் போதுமானதாக உள்ளது.

இவை மூன்றும் இயற்கையாக ஒருவர் உள்ளத்தில் இருந்தால் தானாகவே பிறரிடம் வெளிப்பட்டு விடும். ஆனால் பிறரது உள்ளத்தில் இடம் பிடிப்பதற்காக மட்டுமே இவை தோன்றுமேயானால் நிரந்தரம் குறைவாகி விடும்.

# காப்பாற்ற முடியவில்லையாயின் வாக்களிக்காதீர்கள்!

உங்களால் ஒரு வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் எதற்காகவும் வாக்களிக்காதீர்கள்.

நீங்கள் வாக்களிக்கவில்லை என்றால் என்ன நடந்து விடப் போகிறது.

ஒரு நாள் கவலைப்படுவார்கள் மறந்தும் போவார்கள்.

அவ்வாறின்றி நீங்கள் வாக்களித்து நிறைவேற்ற முடியவில்லை யென்றால் அது அவர்களுக்கு மீள முடியாத ஒரு கைசேதம்.

பெறுமதியான நாட்களின் வீணடிப்பு,

மனிதர்களின் மீதான நம்பிக்கையிழப்பு,

நீண்டதொரு காத்திருப்பின் பின்னரான வலி மிகுந்த ஏமாற்றம்.

இத்தனையும் தேவை தானா?



வாக்களித்தால் நிறை வேற்றிவிடுங்கள்.

இல்லையெனில் வாக்களிக்காதீர்கள்.

சில சமயங்களில் வார்த்தைகளுக்காக வாக்களிக்கும் நல்லவர்களை விட வீம்புடன் நிராகரிக்கும் கெட்டவன் சிறந்தவனாகிறான்.

– சுமையா சத்தார் –



அரபாத் பஹர்தீன்



# தென்னாபிரிக்காவிடம் தோற்று இறுதிப் போட்டிக்கான கனவை கலைத்துக் கொண்டது இலங்கை

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 2ஆவதும் இறுதியுமன டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 109 ஓட்டங்களால் இலங்கை அணி தோற்று தொடரை 2:0 என இழந்ததுடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் உலகக்கிண்ணத்தின் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பையும் இழந்தது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் 2ஆவதும் இறுதியுமான போட்டி கடந்த 5ஆம் திகதி ஆரம்பித்திருந்தது.

இப்போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு இருக்கும் என்ற நிலையில் இலங்கை அணி களம் கண்டது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தெரிவு செய்து தமது முதல் இன்னிங்ஸிற்காக 358 ஓட்டங்களைப் பெற்றது. இந்தப் போட்டியில் ரியான் ரிக்கல்டன் தனது சர்வதேச அறிமுக டெஸ்ட் சதத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் 101 ஓட்டங்களை குவித்திருந்தார். மேலும், கைல் வெர்ரைன் 105 ஓட்டங்களை குவித்திருந்தார். பந்துவீச்சில் லஹிரு குமார நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி 328 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பதும் நிஸ்ஸங்க 89 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 48 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். தென்னாப்பிரிக்கா அணியின் சார்பில் பந்துசீச்சில் டேன் பேட்டர்சன் ஐந்து விக்கெட்டுக்களை சாய்தார்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 30 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாப்பிரிக்கா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 317 ஓட்டங்களை குவித்திருந்தது. அணியின் தலைவர் தெம்பா பவுமா 66 ஓட்டங்களையும், எய்டன் மார்க்ரம் 55 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய ஐந்து விக்கெட்டுக்களையும் அள்ளிச் சுருட்டினார்.

அதன்படி தென்னாபிரிக்க அணியால் நிர்ணயிக்கப்பட்ட 348 என்ற சவாலான வெற்றி இலக்கினை நோக்கி களம் நுழைந்த இலங்கை அணி போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது, அரை சதத்தை நெருங்கிய அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் மீதான நம்பிக்கை பொய்க்க அதிக நேரம் எடுக்கவில்லை. குசல் மெண்டிஸ் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதுஇ கேசவ் மஹராஜ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தனஞ்சய டி சில்வா ககிசோ ரபாடா வீசிய பந்தில் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதனையடுத்து இலங்கை அணியின் பின் வரிசை துடுப்பாட்ட வீரர்களான பிரபாத் ஜயசூர்யாஇ விஷ்வா பெர்னாண்டோஇ லஹிரு குமார ஆகியோர் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் ஆட்டமிழந்தனர்.

இதனால் இலங்கை அணி 239 ஓட்டங்களுக்குள் சுருண்டது,இதனால் தென்னாபிரிக்க அணி 109 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என வெற்றி கொண்டது. பந்துவீச்சில் கேசவ் மஹராஜ் ஐந்து விக்கெட்டுகளை சுருட்டினார். இந்த வெற்றியுடன் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் தென்னாப்பிரிக்கா முதலிடத்திற்கு வந்துள்ளது. இந்திய அணிக்கு எதிராக அண்மையில் இரணடாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலிடத்தில் இருந்தது.

எனினும்இ தற்போது இரண்டாம் இடத்திற்கு அவுஸ்திரேலியா தள்ளப்பட்டுள்ள நிலையில், தென்னாப்பிரிக்கா முதலிடம் பிடித்துள்ளது. நீண்ட காலமாக முதலிடத்தில் இருந்த இந்திய அணி தற்போது மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான போட்டியிலிருந்து இலங்கை அணி வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளையோர் ஆசியக் கிண்ணம்



## இந்தியாவை சுருட்டியது வங்கதேசம்

19 வயதிற்குற்பட்ட ஆண்களுக்கான ஆசியக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பலமிக்க இந்திய அணி தமது துள்ளியமான பந்து வீச்சின் மூலம் 59 ஓட்டங்களால் வீழ்த்திய பங்களாதேஷ் அணி 2ஆவது முறையாகவும் சம்பியன் மகுடத்தினை தனதாக்கி அசத்தியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி ஆரம்பித்த இளையோருக்கான ஆகியக்கிண்ண ஒருநாள் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருந்தன. இதில் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டம் இடம்பெற்றது.

பின்னர் முதல் சுற்றின் முடிவில் குழு ஏ இல் முதலிடம் பிடித்த பாகிஸ்தான் அணியும், குழு பி இல் இரண்டாம் இடம் பிடித்த பங்களாதேஷ் அணியும் முதல் அரையிறுதியில் மோதியது.

அப்போட்டியில் பலமிக்க பாகிஸ்தான் அணியை சுருட்டிய பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

அதேபோன்று குழு பி இல் முதலிடம் பிடித்த இலங்கை அணி குழு ஏ இல் 2ஆம் இடம்பெற்ற இந்திய அணியை எதிர்த்தாடியது. இப்போட்டியில் அதிரடியில் மிரட்டிய இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கான தமது வரவை உறுதிப்படுத்தியிருந்தது.

இந்நிலையில் சம்பியன் மகுடத்தினை வெற்றி கொள்ளும் அணியைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை டுபாய் சர்வதேச மைதானத்தில் ஆரம்பித்தது. அப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி 49.1 ஓவர்களுக்கு முகம் கொடுத்த அவ்வணியால் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. துடுப்பாட்டத்தில் ரிஸான் ஹொசைன் மற்றும் மொஹமட் சிஹாப் ஆகியோர் முறையே 47 மற்றும் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யுடாஜிட் குஹா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தொடர்ந்து பங்களாதேஷ் அணியால் நிர்ணயம் செய்யப்பட்ட 199 ஓட்டங்கள் என்ற மிகச் சவால் மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் நிலைக்கத் தவறி சீரான இடைவெளியில் பெவிலியன் திரும்ப 35.2 ஓவர்களுக்கு மாத்திம் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள பங்களாதேஷ் அணி 59 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் 2ஆவது முறையாகவும் இளையோர் ஆசியக் கிண்ண சம்பியன் மகுடத்தினைத் தனதாக்கியது.

இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் மொஹமட் அமான் 26 ஓட்டங்களைப் பெற்றார் .பந்துவீச்சில் அஸீசுல் ஹக்கீம் மற்றும் இக்பால் ஹுசைன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினர்.

மேலும் இத் தொடரில் பாகிஸ்தான் அணியின் ஸஹ்ஸைப் கான் 336 ஓட்டங்களைப் பெற்று அதிகூடிய ஓட்டங்கள் பெற்றவர் வரிசையில் முதலிடத்தையும், பங்களாதேஷ் வீரரான இக்பால் ஹுசைன் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தி அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் வரிசையில் முதலிடத்தையும் பிடித்துக் கொண்டனர். அத்துடன் இத் தொடரின் சிறப்பாட்டக் காரராக பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளரான இக்பால் ஹுசைன் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

### 19ஆவது ஆசிய கிண்ண உதைப்பந்தாட்ட தகுதிகாண் தொடர்

# பலமிக்க அணிகளுடன் பலப்பரீட்சை நடாத்தப் போகும் இலங்கை




19ஆவது ஆசியக் கிண்ண உதைப் பந்தாட்டத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளின் குழுநிலையில் இலங்கை அணி குழு டீ இல் தாய்லாந்து, துர்க்மெனிஸ்தான் மற்றும் சீன தைப்பே ஆகிய பலமிக்க நாடுகளுடன் அங்கம் வகிக்கின்றது.

எதிர்வரும் 2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி வரை சவுதி அரேபியாவில் இடம்பெறவுள்ள 19ஆவது ஆசியக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதிகான் போட்டிகள் இன்னும் சில வாரங்களில் இடம்பெறவுள்ளன.

இத் தகுதிகான் தொடருக்கான திகதி மற்றும் மைதான விபரம் இன்றுவரையில் அறிவிக்கப்பட்டிருக்க வில்லை.

இந்நிலையில் இத் தகுதிகான் போட்டிகளில் பங்கேற்கும் 24 அணிகளும் பிரிக்கப்பட்டு குழுநிலை விபரம் நேற்று முன்தினம் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டது.

அதற்கேற்ப 24 அணிகளும் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கை அணி குழு டீ இல் இடம்பெற்றுள்ளது. குழு டீ இல் இலங்கை அணியுடன் பல சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற பலமிக்க அணிகளான தாய்லாந்து, துர்க்மெனிஸ்தான் மற்றும் சீன தைப்பே ஆகிய அணிகள் அங்கம் வகிக்கின்றன.

இத் தொடர் இலங்கை அணிக்கு மிகப் பெரிய சவாலைக் கொடுக்கும் எனக் கருதினாலும், சமீபத்திய சில போட்டிகளில் இலங்கை அணியின் திறன் சற்று அதிகரித்துள்ளமையால் இத் தொடரில் இலங்கை சாதிக்கும் என எதிர்பார்க்கலாம்.

மேலும் இத் தகுதிகாண் தொடரின் குழு நிலை விபரத்தினைப் பார்க்கையில் ,

**குழு ஏ - தஜிகிஸ்தான், பிலிப்பைன்ஸ், மாலைதீவு, டிமோர் லெஸ்டி**

**குழு பி - லெபனான், யெமன், பூடான், புரூனை**

**குழு சீ - இந்தியா, ஹொங்கொங், சிங்கபூர், பங்களாதேஷ்**

**குழு டீ - தாய்லாந்து, துர்க்மெனிஸ்தான், சீன தைப்பே, இலங்கை**

**குழு ஈ - சிரியா, ஆப்கானிஸ்தான், மியன்மார், பாகிஸ்தான்**

**குழு எப் - வியட்நாம், மலேசியா, நேபாளம், லாவோஸ்**

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.